விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 06 திங்கட்கிழமை (19.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

# அரசியல் தீர்வைப் பெறுவதற்கு அரசாங்கத்துடன் பேசத் தயார்



## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஏற்படுவதையே நாம் விரும்புகின்றோம். நாட்டுக்குள் பிரிவினையை நாம் கோரவில்லை. இது குறித்து நாம் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராகவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் புதல்வர்கள் சென்னைக்குச் செல்ல எதிர்ப்பு

(சென்னை)

சென்னைக்கும் பஞ்சாப் அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற இருபது-20 கிரிக்கெட் போட்டியை பார்வையிட இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர்கள் இருவர் சென்னைக்குச் செல்வதாக வெளியான செய்தியையடுத்துத் தமிழக அரசியல் கட்சிகளின்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் பொன்சேகாவுக்கு தண்டனை வழங்கப்படலாம்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அடுத்த நீதிமன்ற விசாரணையின் போது தண்டனை வழங்கப்படலாம் எனத் தேசிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணை நடைபெறவிருக்கின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பராக்கிரமபாகு சமுத்திரத்தில் மூழ்கி யாழ்ப்பாண மாணவன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்குச் சுற்றுலா சென்ற மாணவர் ஒருவர் பராக்கிரமபாகு சமுத்திரத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்கும் 16 வயதுடைய விமலராஜன் அபிதரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவார்.

சங்கானைப் பாடசாலை ஒன்றிலிருந்து சுமார் 50 மாணவர்கள் தென்பகுதிக்குச் சுற்றுலாச் சென்றனர். இவர்களுடன் பிரஸ்தாப மாணவனும் சென்றுள்ளார்.

இவர்கள் பொலநறுவையிலுள்ள பராக்கிரமபாகு சமுத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் தாயாருக்கு மலேசியா புகலிடம்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் இருந்து திருப்பியனுப்பப்பட்ட பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் மீண்டும் மலேசியாவில் தங்கியுள்ளார்.

அவருக்கு அந்த நாட்டு அரசு ஒரு மாத காலத்திற்கு விசா அனுமதி வழங்கியுள்ளது. மலேசியா விசா முடிந்த நிலையில் அங்கிருந்து வெள்ளிக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

ஏழாவது நாடாளுமன்றத்தின் புதிய எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியே தீர்மானிக்க வேண்டும் என ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் சார்பில் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் கட்சியின் தலைவரே அந்தக் கட்சியின் தலைவராக நியமிக்கப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக இந்தியாவுக்குச் செல்ல விரைவில் வசதி

### விசா அலுவலகமும் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இந்தியத் தூதுவராலயத்தின் விசா அலுவலகம் ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்த் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பலாலி விமான நிலையத்திலிருந்தும் காங்கேசன்துறையிலிருந்தும் பயணிகள் விமான சேவை மற்றும் கப்பல் சேவை என்பன இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்கட்சி நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இக்

(16 ஆம் பக்கம் பார்க்க)



## பொன்சேகா நாடாளுமன்றம் செல்ல யாருடைய அனுமதியும் தேவையில்லை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகத் தேசிய முன்னணியின் தலைவரும் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்திற்கு சமுகமளிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்த கருத்தினை ஜனநாயக தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் அனுரகுமார திஸநாயக்க கண்டித்துள்ளதுடன் அதனை நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்ற

(15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்றில் முன்வரிசை!

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு நாடாளுமன்றத்தில் முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகா ஓர் கட்சியின் தலைவர் என்ற காரணத்தினால் எதிர்க்கட்சியின் முன் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்படவுள்ளது.

கட்சித் தலைவர்களுக்கு முன் வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்படுவது வழமையான நிகழ்வாகும். ஏனையோர் சேவை மூப்பு அடிப்படையில் அமர்ந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை

(15 ஆம் பக்கம் பார்க்க)

siat
ACADEMY
Lead, Create, Animate
A unit of SIAT GROUP
BANGALORE - INDIA



இந்தியாவில் Animation துறையில் முன்னணியில் திகழும் Siat Academy யாழ் நகரில் தமது கல்வி நிறுவனத்தை Mag net Academy உடன் சேர்ந்து ஆரம்பிக்கின்றது. இதற்கான கருத்தரங்கும் பயிற்சி பட்டறையும் வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது. உங்களுக்காக இந் நிறுவனத்தின் சிறப்புத் தேர்ச்சியாளர்கள் வருகை தருகிறார்கள்.

பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

சிந்தியுங்கள் செயற்படுங்கள் பயனடையுங்கள்

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

தொடர்புகளுக்கு: 0777497186, 021 3214756

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பேசும் படம்



யாழ்.நகரில் இரவில் எமக்கு இது தான் வேலை...

# பார்வதி அம்மையாரை திருப்பியது சரியானது-சுப்பிரமணியசுவாமி

(சென்னை)

மலேசியாவிலிருந்து சென்னை வந்த விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியை மீண்டும் மலேசியாவுக்கே திருப்பி அனுப்பியது சரியான நடவடிக்கையே என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கருத்து தெரிவித்துள்ளார்.

மலேசியன் ஏர்லயன்ஸ் விமான மூலம் 16ஆம் திகதி இரவு 10.45 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்தார் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள். பக்கவாத நோய்க்கு சிகிச்சை எடுக்க கோலாலம்பூரிலிருந்து சென்னைக்கு வந்த அவரை விமானத்தில் இருந்து இறங்க விடாமல் தடுத்திருக்கிறார்கள் குடியுரிமை அதிகாரிகள். இந்தியாவுக்குள் நுழைவதற்கான உரிமை உங்களிடம் இல்லை என பார்வதி அம்மாளையும் அவருக்கு துணையாக வந்த விஜயலட்சுமி என்ற பெண்ணையும் தடுத்திருக்கிறார்கள் அதிகாரிகள்.

மருத்துவ சிகிச்சைக்காகவே தான் சென்னை வந்திருப்பதாக பார்வதி அம்மாள் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லியும் அனுமதி மறுக்கப்பட்டதோடு அவர் மீண்டும் மலேசியாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டார்.

தகவல் அறிந்து வைகோ, பழ.நெடுமாறன் உள்ளிட்ட தலைவர்கள் சென்னை விமான நிலையம் சென்றனர். ஆனால் அவர்களுக்கு பார்வதி அம்மாளைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது.

இது குறித்து சுப்பிரமணிய சுவாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பார்வதியை இந்தியாவுக்குள் அனுமதிக்க மறுத்த இந்திய அரசின் நடவடிக்கை மிகவும் சரியானது. யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் வந்து தங்கிச்செல்ல இந்தியா ஒன்றும் தர்மசாலை அல்ல.

ராஜீவ் காந்தியை கொன்றதற்காக பார்வதி முதலில் கண்டனம் தெரிவிக்கட்டும். அதன் பிறகு அவரை இந்தியாவுக்குள் அனுமதிப்பது பற்றி பிறகு பரிசீலிக்கலாம் என்று சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். (ச-5)

# வடக்கு மக்கள் ஜனாதிபதித் தேர்தலை விட பொதுத் தேர்தலை புறக்கணித்துள்ளனர்

## லக்பிம வார ஏட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்ததை விட குறைவான மக்களே பொதுத் தேர்தலில் வாக்களித்துள்ளனர் என லக்பிம வார ஏட்டின் பாதுகாப்பு பத்தி எழுத்தாளர் ரங்கா ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அதன் முக்கிய பகுதிகள் வருமாறு,

வடக்கிலும் தெற்கிலும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதை மக்கள் பெருமளவில் தவிர்த்துக்கொண்டுள்ளனர்.

தென்னிலங்கையில் 52 சதவீதம் மக்கள் வாக்களித்துள்ளனர் ஆனால் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 76 வீதம் மக்கள் வாக்களித்திருந்தனர்.

யாழில் மக்கள் வாக்களித்த விகிதம் மிகவும் குறைவு. ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்ததை விட குறைவான மக்களே பொதுத் தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 25 சதவீத மக்கள் வாக்களித்திருந்தனர். ஆனால் பொதுத் தேர்தலில் 23 சதவீத மக்களே வாக்களித்துள்ளனர்.

வடக்கிலிருந்து பெருமளவான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக சிலர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலைவிட பொதுத்தேர்தலை மக்கள் அங்கு புறக்கணித்துள்ளதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை எனினும் வன்னிப்பகுதியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அங்கு 43.9 வீதமக்கள் வாக்களித்துள்ளனர்.

அரசின் செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளதையே இந்த வாக்களிப்புகள் காட்டுகின்றன.

மேலும் யாழ். குடாநாடு முழுவதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 65 ஆயிரத்து 119 வாக்குகளையே பெற்றுள்ளது. ஆனால் பிரித்தானியாவில் நடைபெற்ற வட்டுக் கோட்டைத் தீர்மானம் மீதான மீள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 64 ஆயிரத்து 256 தமிழ் மக்கள் வாக்களித்துள்ளது முக்கியமானது.

எனவே தமிழ்மக்கள் தமக்கு ஒரு புதிய தலைமையும் அமைப்பும் வேண்டும் என்பதை மௌனமாக தெரிவித்துள்ளனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஆட்டோக்கள் 2 நேருக்கு நேர்மோதி விபத்துக்குள்ளானதில் 4பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லிவீதி அத்தியடிச் சந்தியில் நேற்றிரவு 2 ஆட்டோக்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்குநேர் மோதியதில் 4 இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

ஸ்ரான்லி வீதியூடாக சென்ற ஆட்டோவும் அத்தியடிவீதியூடாக வந்த ஆட்டோவுமே நேருக்கு நேர் மோதிக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் ஆட்டோவில் பயணித்த வி.விஜயகுமார் (வயது 21), வி.லீசோக் (வயது 26), ஆர்.தீஸன் (வயது 30), என்.பகீரதன் ஆகிய நால்வருமே படுகாயமடைந்தவராவர்.

படுகாயமடைந்த நால்வரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை ஆட்டோக்கள் முற்றாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## வாகன விபத்தில் தந்தையும் மகனும் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் இராணுவத்தின் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானதில் தந்தையும் மகனும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் கோண்டாவில் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தின் போது உரும்பிராயைச் சேர்ந்த துளசிதரன் (வயது 48), து.அற்சுதன் (வயது 7) ஆகியூ இருவரும் படுகாயமடைந்தவர்களாவர்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து தனது மகனை ஏற்றிக்கொண்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த தந்தை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-30)

## வலிகாமம் கல்விவலய கரப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் கரப்பந்தாட்டப்போட்டி இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்கு கொள்ளும் கோட்டமட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் எம்.நடராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு 15,17, மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான இறுதிப் போட்டி நடை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-2)

# முல்லைத்தீவில் 441 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன!

(வவுனியா)

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களில் ஒரு தொகுதியினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 16ஆம் திகதி மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஆறு நலன்புரி நிலையங்களிலிருந்து 441 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 71 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ளது.

வலயம் பூச்சியமான கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் இருந்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 128 பேர் மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் முல்லைத்தீவு தெற்கு முள்ளியவளை மத்தி, கள்ளப்பாடு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

வலயம் ஒன்றான ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையத்தில் இருந்து 193 குடும்பங்களைச் சேர்ந்த 299 பேர் மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் முள்ளிவளைப்பகுதிக்கு குடியேற்றப்பட்டுள்ளனர். வலயம் இரண்டான இராமநாதன் நலன்புரிநிலையத்திலிருந்து 71 குடும்பங்களைச்சேர்ந்த 220 பேர் முல்லைத்தீவு, முள்ளியவளை மத்தி, கள்ளப்பாடு வடக்கு, வற்றாப்பளை ஆகிய பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

மூன்றாம் வலயமான அருணாச்சலம் நலன்புரி நிலையத்திலிருந்து 59 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் முல்லைத்தீவு கறுத்துறைப்பற்றுக்கு மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

வலயம் நான்கிலிருந்து 57 குடும்பங்களைச்சேர்ந்த 186 பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் முல்லைத்தீவு தெற்கு, முள்ளியவளை மத்தி ஆகிய பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களைத்தவிர வலயம் 6 இலிருந்து 19 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் வற்றாப்பளைக்கு மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றும் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்றிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## யாழ். பேருந்து நிலையத்தில் சாரதியின் பூதவுடலுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை பேருந்து நிலையத்தில் பலியான சாரதியின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று மதியம் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

கடந்த புதுவருடதினத்தன்று யாழிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு திருகோணமலைக்கு சென்ற பஸ் அங்கு பயணிகளை இறக்கிவிட்டு அவ்விடத்தில் உறக்கத்திலிருந்த போது பிறிதொரு பேருந்து மோதியதில் இவர் உயிரிழந்தார்.

இவரது சடலம் சாவகச்சேரிக்கு கொண்டு வரப்பட்டு இறுதி நிகழ்வுவிற்காக நேற்று யாழ். பேருந்து நிலையத்தில் ஒரு மணித்தியாலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. புலோலிப்பளையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (37) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இவ் அஞ்சலி நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ்.அமைப்பாளர், வடபிராந்திய போக்குவரத்து சபை பொது முகாமையாளர், ஊழியர்கள், ஆட்டோ சங்கத்தினர், சிற்றூர்தி சங்கத்தினர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர். (ச-30)


## கண்ணீர் அஞ்சலி



ரவீந்திரராசன் கலைச்செல்வி

பிறப்பு 11.02.1985 — அழிப்பு 17.04.2010

எமது கல்லூரியின் பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைமாணி இறுதியாண்டு மாணவி ர.கலைச்செல்வி அகால மரணமான செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(1210)

# இன்று ஒரு தகவல்

## தன்னம்பிக்கை

ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நபிகள் நாயகம் அதில் பேசிக் கொண்டிருந்தார். கூட்டத்திலிருந்தவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

''இந்த உலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்தது இரண்டு உண்டு. அது நல்லதாக இருந்தால் இந்த உலகமும் நல்லா இருக்கும். அது கெட்டதாக இருந்தால் இந்த உலகமும் கெட்டுப் போய்விடும். அவை இரண்டும் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

கூட்டத்தில் இருந்தோர் யோசித்தார்கள். சரியான விடை தெரியவில்லை.

உடனே நபிகள் நாயகம் அதற்குப் பதில் சொல்கிறார். அவையிரண்டும் என்னவென்றால்,

ஒன்று–அரசு, இன்னொன்று– அறிவு என்கிறார்.

தன்னம்பிக்கையோடு இருங்கள் என்று அவர் அடிக்கடி சொல்லுவார். அந்தத் தன்னம்பிக்கை என்பது என்ன?

தன்னை நம்புவது. தன்வலிமையை நம்புவது. தன் அறிவை நம்புவது. அடுத்தவர்கள் துணையில்லாமல் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வது.

அதுதான் தன்னம்பிக்கை.

இந்தத் தன்னம்பிக்கை சிங்கத்தை ஒரு உதாரணமாக சொல்வதுண்டு.

காட்டில் கரடி– புலி– ஓநாய் என்று எத்தனையோ விதமான மிருகங்கள் இருக்கிறது. பல மிருகங்கள் எப்படியானவையென்றால், மான்–முயல் என்று ஏதாவது கிடைத்து விட்டால் அடித்துக் கொன்று விடும். வேணுமென்ற அளவுக்குச் சாப்பிட்டு மீதியை மறுநாள் சாப்பிடுவதற்காகத் தான் தங்கியிருக்கும் இடத்துக்கு இழுத்துப் போய்விடும். அதனால் அது போன்ற விலங்குகள் தங்கியிருக்கும் இடங்களைப் பார்த்தால் மிகவும் மோசமாகி விடும். அங்கு சிதைந்த உடல்களெல்லாம் கிடப்பதால் துர்நாற்றம் வீசும்.

ஆனால் சிங்கத்தின் குகையைப் பார்த்தீர்களானால் எப்பொழுதும் சுத்தமாக இருக்கும். அந்தக் குகையில் எலும்போ, தோலோ எதுவும் இருக்காது. என்ன காரணம் தெரியுமா?

சிங்கம் நன்றாகப் பசியெடுக்கும் வரை கவலைப்படாமல் அமைதியாக –நிம்மதியாக படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும். இனிப் பசியை தாங்கமுடியாது என்ற நிலை வந்ததும் கண்ணை முழித்துக் கொண்டு எழுந்திருக்கும். குகையில் ஒரு நாலடி நடக்கும். பின் குகைக்கு வெளியில் வரும்.

ஆ... ஊ... என்று கர்ச்சிக்கும். இந்தச் சத்தம் எதிரிலுள்ள மலையில் மோதி எதிரொலிக்கும்.

காட்டிலுள்ள மான்– முயல் எல்லாம் இந்தச் சத்தத்தைக் கேட்டு விட்டு அங்கேயும் இங்கேயும் குறுக்கும் நெடுக்குமாக ஓடும்.

அப்படி ஓடிக் கொண்டிருக்கும் போது அவற்றில் தன்னுடைய குகைப் பக்கமாக ஓடிக்கொண்டிருக்கும் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்யும். அதனிடம் போய் மெதுவாக ஒரு தட்டுத் தட்டும். அது சுருட்டிக் கொண்டு விழும். வேண்டுமென்பதை கடித்துச் சாப்பிடும். மீதியை அங்கேயே எறிந்து விட்டு மெதுவாக நடந்து திரும்பி வரும்.

குகையில் படுத்து மறுபடியும் தூங்க ஆரம்பித்து விடும். அடுத்த வேளை சாப்பாட்டைப் பற்றி இப்போதைக்குக் கவலைப்படாது.

அந்த அளவுக்கு அதற்கு தன்னம்பிக்கை உண்டு. தேவைப்படும் போது ஏதாவதொன்றைப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை. எங்கே போய் விடப் போகிறது. பசியெடுத்தால் இரை தானாகத் தேடி வரும். கவலை இல்லை என்பது போல் அது தூங்கும்.

சிங்கத்திடம் இருந்த அந்தத் தன்னம்பிக்கையை மட்டுமே நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றதையெல்லாம் கற்றுக் கொள்ளக்கூடாது. பகுத்தறிவில்லாத விலங்குகளிடம் இருக்கும் தன்னம்பிக்கை பகுத்தறிவுள்ள மனிதர்களிடம் இல்லையென்பது நபிகள் நாயகத்தின் கவலை.

அவரை நினைக்கும் போதெல்லாம் நமக்கு தன்னம்பிக்கை வளரவேண்டும். நல்ல சிந்தனைகள் வளர வேண்டும்.

ஒருத்தர் மதுவிலக்கு சம்பந்தமாக பிரசாரம் செய்தார். 10 பேரை உட்கார வைத்து விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு போத்தலில் சாராயத்தை ஊற்றி அதில் ஒரு புழுவைப் பிடித்துப் போட்டார். கொஞ்ச நேரத்தில் அந்தப் புழு துடிதுடித்து இறந்து போனது.

இதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பேசினவர் கூட்டத்தைப் பார்த்து,

இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டார்.

ஒருத்தர் எழுந்து நின்று "சாராயம் வயிற்றுக்குள் போனால் வயிற்றிலுள்ள புழு பூச்சியெல்லாம் செத்துப் போய் விடும் என்று தெரிந்து கொண்டேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை மாணவரிடையே நடத்தப்படும் சமூக விஞ்ஞானப் போட்டி –2010

கல்வியமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கான சமூக விஞ்ஞானப்போட்டி நடத்தப்படவுள்ளது.

நான்கு பிரிவாக நடைபெறவுள்ள மேற்படி போட்டியில் முதற் பிரிவில் 200க்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் இரண்டாம் பிரிவில் 201 தொடக்கம் 500 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் மூன்றாம் பிரிவில் 501 தொடக்கம் 1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் நான்காம் பிரிவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் பங்குபற்ற முடியும்.

போட்டியானது தமிழ்மொழி மூலத்திலும் 8,9,10,11 ஆம் தரங்களில் ஆங்கிலமொழி மூலத்திலும் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் தரம் 6–13 வரை கற்கும் அனைத்து மாணவர்களும் பங்குபற்ற வேண்டும் என்பதுடன் வகுப்பு வாரியாக போட்டி நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் கோட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றுவர்.

கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் வலய மட்டப் போட்டியிலும், வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் மாகாண மட்டப் போட்டியிலும் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்றுவர். மேலும் பாடசாலை மட்டப் போட்டிகள் இம்மாதம் 30ஆம் திகதியும் கோட்டமட்டப் போட்டிகள் மேமாதம் 15ஆம் திகதியும் வலய மட்டப் போட்டிகள் யூன் மாதம் 5ஆம் திகதியும் மாகாண மட்டப் போட்டிகள் யூலை மாதம் முதலாம் திகதியும் தேசிய மட்டப் போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 10 ஆம்திகதியும் நடைபெறவுள்ளன.

மேலும் 6,7,8,9 ஆம் தரங்களுக்கான வினாத்தாள் வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் ஆகிய பாடத்திட்டத்திற்கமைவாக அண்மித்த இரண்டு வருடகால தகவல்களை உள்ளடக்கியதாகவும் 10,11 ஆம் தரங்களுக்கான வினாத்தாள் வரலாறு பாடத்திட்டத்திற்கமைவாகவும், தற்கால அரசியல், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் சமூகத் தகவல்களை உள்ளடக்கியதாகவும்,

தரம் 12,13 இற்கான வினாத்தாள் பாடத்திட்டத் திற்கமைவாகவும் தற்கால தகவல் குறித்து கவனம் செலுத்தியும் தயாரிக்கப்படவுள்ளதுடன் வரலாறு, புவியியல், தகவல் தொழில்நுட்பம், அரசியல் ஆகிய பாடங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்களும் வினாத்தாளில் உள்ளடக்கப்படவுள்ளது. அத்துடன் பொது அறிவு, தர்க்கவியல், நுண் ணறிவு பிரச்சினைக்கு தீர்வு காணல் ஆகிய திறன்களை மதிப்பீடு செய்யும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்படவுள்ளது. (6-19)

# வாதரவத்தை பொக்கணையில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

(வேலணை)

புத்தூர் வாதரவத்தை பொக்கணைப் பகுதியில் வறட்சி காரணமாக குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. நீர்நிலைகளில் வறட்சி காரணத்தினால் நீர் வற்றி வருகின்றது. இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாக வேண்டியுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் குடிநீர் வழங்கல் பிரிவினரால் தினமும் ஒரு தடவை மட்டுமே தண்ணீர் வழங்கப்படுகின்றது. இது போதுமானதாக இல்லை. எனவே தற்போதைய வறட்சியையும் வெப்பத்தையும் கருத்தில்கொண்டு குடிநீர் வழங்கல் சேவையை இரண்டு தடவையாக கூட்டுமாறும் தமது பகுதிக்கு புத்தூர் நிலாவரை நன்னீர் கிணற்றிலிருந்து குழாய் மூலம் நீர் கிடைக்க சம்பந்தப்பட்டதரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (2-22)

# அனர்த்த பாதுகாப்புக் கல்வி தொடர்பான செயலமர்வு

(அல்வாய்)

கல்வியமைச்சினால் பாடசாலை மட்டத்தில் அனர்த்த பாதுகாப்புக் கல்வி தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் GTZ/ESC நிறுவனம் பாடசாலைகளுக்கான செயலமர்வை நடத்தவுள்ளது.

எனவே இது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்கள் தங்களது பாடசாலைகளிலிருந்து ஒரு பொறுப்பாசிரியரின் பெயரை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறும் செயலமர்வு பற்றிய விடயம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (6-19)

# இராசி பலன்

19-04-2010

(சித்திரை 6 , திங்கட்கிழமை)

பஞ்சமி பிற்பகல் 3.24 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 5.45 மணிவரை

இராகுகாலம் 7.32-9.02 மணிவரை

சுபநேரம் 12.02-1.32 மணிவரை

நல்லூர் கைலாசப்பிள்ளையார் கொடி,

அளவெட்டி அழகொல்லை விநாயகர் கொடி,

அராலி அகாயக்குள் பிள்ளையார் கொடி,

புங்குடுதீவு கண்ணகையம்மன் கொடி,

அமிர்தசித்தம்.

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை, போசன சுகம். |
| இடபம் | முயற்சி தாமதம், அதிக செலவு, மனஸ்தாபம், போசனசுகக் குறைவு. |
| மிதுனம் | நண்பர்கள் சந்திப்பு, தொழில் நன்மை, தன்னம்பிக்கை, போசன சுகம். |
| கடகம் | காரிய அலைச்சல், புதிய திருப்பம், சுபசெலவு, உறவினர் சந்திப்பு. |
| சிங்கம் | பெருமையடைதல், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், போசன நன்மை. |
| கன்னி | அதிகாரம், இனிய தகவல், அதிக பிரயாசை, உடல்நலம். |
| துலாம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் உதவி, உடல்நலக் குறைவு, திடீர் பயணம். |
| விருச்சிகம் | வீண்பகை, காரிய தாமதம், போசனசுகம், வாகன பயம். |
| தனுசு | களஸ்திர நன்மை, காரி அனுகூலம், பொருள் சேர்க்கை, பிரயாணம். |
| மகரம் | சுவாரஸ்யம், நல்ல காரியம், தனவருவாய், ஆரோக்கிய நிலை |
| கும்பம் | தொழில் முன்னேற்றம், பண விரயம், அமைதிக் குறைவு, காரியதாமதம். |
| மீனம் | சுபகாரியம், மாதாசுகம், பயணம், கடினவார்த்தை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 60 |
| தக்காளி | 80 | 90 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 160 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | .50 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 60 |
| லீக்ஸ் | 150 | 200 | 180 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 350 |
| போஞ்சி | 250 | 300 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 130 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 35 |

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி-2010












யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமான சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந் அழைத்துவரப்படுவதையும் அவர் கண்காட்சியை நாடாவை வெட்டி ஆரம்பித்து வைப்பதையும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மங்கல விளக்கேற்றுவதையும் மேலுள்ள படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் யாழ். அரச அதிபர் க.கணேஷ், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் கண்காட்சியை இந்தியத் தூதுவர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். படங்கள்: டுசாந்தன்

## கோலாகலமாக ஆரம்பமாகிய சர்வதேச வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கான நுழைவாயில் என்னும் தொனிப்பொருளில் யாழ். மத்திய கல்லூரியில் நேற்று கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட சர்வதேச வர்த்தகக் கண்காட்சியினை காண்பதற்கென பெருந் திரளான மக்கள் வருகை தந்திருந்தனர்.

லங்கா எக்ஸ்பிசன் கொன்பேரன்ஸ் சேர்விஸ், சம்பர்ஸ் கொமர்ஸ் இன்டஸ்றீஸ் ஸ்ரீலங்கா, சம்பர்ஸ் இன்டர்ஸ்றீஸ் யாழ்ப்பாணம் ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சியில் மொத்தமாக 140 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 30 கூடங்கள் இந்திய காட்சிப் படுத்தலுக்கும், பெரும்பாலானவை கொழும்பிலுள்ள பாரிய தொழில் முயற்சியாளருக்கும் ஏனையவை யாழ்.மாவட்ட உற்பத்தியாளர்ளுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளன.

இங்கு தொழில் இயந்திரங்கள்,நவீன பொறியில் முறைகள், தகவல் தொழில் நுட்பவியல்கள் ,வெளிநாட்டு உயர்கல்வி உணவுமுறைகள் என நவீன பொறிமுறை சாதனங்கள் காட்சிக்கூடங்கள் ஒவ்வொன்றிலும் வைக்கப்பட்டுள்ளன.

சாரதாரண முறையில் பொருட்கள் தயாரிக்கும் அனைத்து இயந்திரங்களையும் மக்கள் பயன்படுத்துவதற்கேற்றவாறு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளன.

மிக விசேடமாக பின்தங்கிய சிதைந்து போன கைத்தொழில் வர்த்தக முயற்சிகளை சமாதான காலத்தில் மிக துரிதமாக முன்னெடுத்து தொழில்நுட்ப மாற்றங்களையும் சேவைகளையும் உடனடியாக வழங்கத்தக்க ஓர்கருவியாகவே இக்கண்காட்சி நடத்தப்படுகிறது.

பல வருடம் காத்திருந்து பெறவேண்டிய தொழில்நுட்ப முயற்சியினை 3 நாட்களில் மக்களுக்கு தேவையான புதிய தொழில் நுட்ப முறைகள் பற்றிய அறிவை ஏற்படுத்தும் இக் கண்காட்சி வருடந்தோறும் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வாக அமைய வேண்டுமென வடக்கு-கிழக்கு பிராந்திய வணிக ஒன்றியத்தின் ஆலோசகர் டபிள்யூ. ஜே.குணரட்ணம் குறிப்பிட்டார்.

யாழ்.மண்ணிற்கு இக்கண்காட்சி மிகவும் நன்மையானதொன்றாகும். இளைஞர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது சிறந்த களமாக அமையும்.

நவீன முறைகளில் பொதி செய்யும் நிறைய இயந்திரங்களைக் காணக்கூடியதாய் இருக்கின்றது.

இக்கண்கட்சி குறித்து யாழ்.மாநகர முதல்வர் குறிப்பிடுகையில், நிறுவனங்களுடன் நட்புறவை ஏற்படுத்தி யாழ்.மாவட்டத்திற்கு தேவையான தொழில்நுட்பங்களை பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்றார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் நலிவடைந்த உற்பத்திகளை இக்கண்காட்சி மூலம் ஊக்குவிக்க முன்வரவேண்டுமென்றும் பாலின் உற்பத்தியினை யாழில் அதிகரித்துக் கொள்ள இக்கண்காட்சி ஓர் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி புரட்சியை ஏற்படுத்த வல்லதாகும். புதிய தொழில்நுட்பங்களை ஏற்படுத்த இக் கண்காட்சி மிகச்சிறந்தது என பலதரப்பட்ட உயர் அதிகாரிகளும் கருத்துக்களை தெரிவித்தனர். (2-30)

## அடிக்கடி தடைப்படும் தீவக பஸ் சேவை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறையை பிரதேசத்தில் அடிக்கடி பஸ்கள் பழுதடைவதால் பயணிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசு, வர்த்தக கூட்டுறவு ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன ஊழியர்கள் மற்றும் இறைச்சி வியாபாரிகள் என பலதரப்பட்டவர்கள் அதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் கவனம் எடுக்கும் படியும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் . (2-72)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஆறுமுகம் சபாநாதன் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக கடந்த மாதம் 22 ஆம் திகதி அன்று யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆயுட்கால உறுப்பினராக இருப்பதுடன சர்வதேச அரிமாக்கழகத்தின் உறுப்பினராக உள்ளார்.

அத்துடன் தீவக லயன்ஸ்கழகத்தின் பட்டயப் பொருளாளராகவும் மாவட்டம் 306 B1 இன் வலயம் 19 இன் வலயத் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## புலிகளினால் 250 நினைவுத்தூபிகள் அழிக்கப்பட்டுள்ளன -சிங்கள ஊடகம் செய்தி

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பினால் கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட 250 நினைவுத் தூபிகள் அழித்தொழிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கின் தொன்மை வாய்ந்த தொல்பொருள் சின்னங்களை அழித்து, புலிகள் புதிதாக நினைவுத்தூபிகளை அமைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அமைப்பின் தலைவர்களினது நினைவுத் தூபிகள் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நினைவுத்தூபிகளை அகற்றும் போது தொன்மை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் தோன்றியதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் மரபுரிமையை வெளிப்படுத்தும் நோக்கில் புலிகள் இவ்வாறு பழைய சின்னங்களை இல்லாதொழித்துள்ளதாக குறித்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-6)




வட இலங்கை சங்கீத சபை நடத்திய வதிவிடக் கருத்தரங்கும் செயலமர்வும் நேற்று யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி இசை ஆசிரியர் சி.சிவஞானராசா உரையாற்றுவதையும் வட இலங்கை சங்கீத சபை முக்கியஸ்தர்கள் மற்றும் இசை ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-எம்.குமார்)

## நன்னடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ள இளைஞர்களின் சீருடையை மாற்றுவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

நன்னடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ள 16 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் சீருடையை மாற்றுவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நன்னடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ள இளைஞர்களின் மன நிலைமையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக சிறைச்சாலையின் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ. ஆர்.டி. சில்வா குறிப்பிட்டார்.

இதற்கமைய அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள காக்கி உடைக்குப் பதிலாக சாதாரண காற்சட்டை மற்றும் வெண்நிற ரீசேட் ஆகியவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறிப்பாக இளைஞர்கள் தாம் சிறைவாசம் அனுபவிக்கின்றமை குறித்து உணராதவாறு அவர்களை மீண்டும் புனர்வாழ்வளிக்கும் நோக்கில் சீருடையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இளைஞர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது பாடசாலை சூழலில் இருப்பது போன்ற உணர்வைக் கொண்டிருக்கும் வகையில் அவர்களின் மன நிலையை உயர்த்துவதற்கு இந்த நடவடிக்கை உதவும் என அவர் தெரிவித்துள்ளார்.

அம்பேபுஸ்ஸ தடுப்புமுகாமில் மேற் கொள்ளப்படும் கல்வி நடவடிக்கைகளை பாடசாலை மட்டத்திற்கு முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதுடன் இது தொடர்பாக கல்வியமைச்சுடன் கலந்துரையாடியுள்ளதுடன் அவர்களின் உடன்பாடும் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் நீதிமன்ற உத்தரவின் பேரில் 3 வருடங்களுக்கு நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுகின்ற இளைஞர்கள் மீண்டும் வெளியேறும் போது புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயமாக்கல் நடவடிக்கை இந்த திட்டத்தின் மூலம் இலகுவாக்கப்படுவதாகவும் நன்நடத்தைக்கு உட்படுத்தப்படும் இளைஞர்கள் புனர்வாழ்வை ஒரு தண்டனையாக உணராமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண் டியுள்ளதாக குறிப்பிட்ட அவர் அவர்களை தொழிற்பயிற்சியுடன் கூடிய சமூக மயமாக்கலுக்கு உட்டுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (2)

## வசந்தகால விடுமுறையை களிப்பதற்கு நுவரெலியாவுக்கு திரளும் மக்கள் கூட்டம்

(கொழும்பு)

நுவரெலியாவில் ஏப்ரல் மாத வசந்த காலம் களை கட்டியுள்ள நிலையில் வசந்த கால விடுமுறையை களிப்பதற்காக வெளி மாவட்டங்களிலிருந்து பெரும் திரளான மக்கள் நுவரெலியாவிற்கு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக அங்குள்ள உல்லாச விடுதிகளிலும் வாடகை விடுதிகளிலும் பெருந்திரளான உல்லாசப் பிரயாணிகள் நிறைந்திருந்ததோடு நகர வீதிகளில் வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகளின் ஓர் அங்கமான மலர் கண்காட்சிப் போட்டி எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் நுவரெலியா விக்டோரியா பூங்காவில் நடைபெறவுள்ளது. நுவரெலிய மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த மலர் கண்காட்சிப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வெள் ளிக்கிண்ணமும் வழங்கப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)

## குறிகாட்டுவான் பகுதியில் பேரூந்து ஓட்டுனர்களிடையே கைகலப்பு

(வேலணை)

நேற்று காலை குறிகாட்டுவான் இறங்குதுறையில் பயணிகளை பேரூந்துகளில் ஏற்றுவதில் ஏற்பட்ட தகராறினால் அரச மற்றும் தனியார் பேரூந்து ஒட்டுனர்களிடையே வாய்த்தர்க்கம் நடைபெற்று இறுதியில் அது கைகலப்பில் முடிந்தது.

இதன் காரணத்தால் பத்து மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையவேண்டிய அரச பேரூந்து வரவில்லை. தனியார் பேரூந்து மட்டுமே வந்தது. அரச பேரூந்து சாரதி தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவமானது 776 வழித்தடங்கல் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து குறிகட்டுவான் பகுதியில் கடமையில் நின்ற ஊர்காவற்றுறை பொலிஸார் பணிமனையின் அலுவலர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2-22)

## வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பு சரத்அமுனுகமவுக்கு வழங்கப்படவுள்ளது

## அரசாங்க தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிவிகார அமைச்சுப் பொறுப்பு கலாநிதி சரத் அமுனுகமவிற்கு வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.கடந்த அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்புக்களை வகித்த அமைச்சர்களுக்கு வேறும் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி சுகாதாரம், கல்வி , சட்ட மறு சீரமைப்பு, தேசத்தை கட்டியெழுப்புதல், உயர் கல்வி, அரசியல் சாசனம், எரிசக்தி, நீர்ப்பாசனம் போன்ற அமைச்சுக்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்காத பசில் ராஜபக்ஷ மற்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோருக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட வுள்ளதாகவும் நீதிமற்றும் அரசியல் சாசன அமைச்சு பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிற்கு வழங்கப்படவுள்ளதாகவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

## கும்புறுபிட்டி வாக்கு எண்ணும் பணி மாவட்ட செயலகத்திற்கு மாற்றம்

(கொழும்பு)

திருகோணமலை கும்புறுபிட்டியில் நடைபெறவுள்ள மீள்வாக்கு பதிவின் பின்னரான வாக்கு எண்ணும் பணிகள் திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

கும்புறுபிட்டி வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகளை எண்ணும்பணியினையும் மேற்கொள்வதென முன்னர் தீர்மானிக் கப்பட்டிருந்தாலும் புலிகளின் அச்சுறுத்தல் இந்தப் பிரதேசத்தில் இருக்கலாமென்ற காரணத்தால் பொலிஸாரின் ஆலோசனைக்கு அமையவே வாக்குகள் எண்ணும் பணியை திருமலை மாவட்ட செயலகத்திற்கு மாற்றுவதென முடிவெடுக்கப்படுவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி கும்புறு பிட்டி வாக்களிப்பு சாவடியில் வாக்களிப்பு மட்டும் இடம்பெறவுள்ளது. தேர்தல் முடிவுகள் திரு கோணமலை மாவட்ட செயலகத்திலிருந்தே அறிவிக்கப்பட்டுள்ளன. (2-6)

## தங்களின் பொருட்களை மீளப் பெறவதற்கான ஏற்பாட்டை முறைப்படி செய்து தரவும்

## வன்னி மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

வன்னிப் போரின் போது தங்களின் உடைமைகளை விசுவமடு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையில் விட்டு வந்த மக்கள் மீண்டும் அவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி ,முல்லைத்தீவு அரசாங்க அதிபர்களிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வன்னி கிழக்கில் விசுவமடு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையில் மக்களின் உடைமைகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. மன்னார், வவுனியா வடக்கு, புளியங்குளம், மாங்குளம் பகுதிகள், மல்லாவி , அக்ராயன்,பூநகரி, கிளிநொச்சி,பளை என்று பல பிரதேசங்களில் இருந்தும் கிழக்கு வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்கள் அப் பொழுது தங்கள் உடமைகளையும் எடுத்துச் சென்றிருந்தனர்.

ஆனால் போரின் தாக்கம் அதிகரித்ததனாலும் இறுதி நாட்களில் உடைமைகளை விட்டு இடம் பெயர்ந்து இறுதியில் வெறுங்கையுடனேயே வெளியேற வேண்டியிருந்ததனாலும் வன்னி மக்களின் உடைமைகள் அனைத்தும் கிழக்கு வன்னியிலேயே கைவிடப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான வாகனங்கள், பல்லாயிரம் கால்நடை கள்,வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர சாதனங் கள், கட்டப் பொருட்கள், மின்சார உபகரணங்கள், மருத்துவ நிலையங்களுக் கான பொருட்கள் கடைச்சாமன்கள் எனக் சகலவற்றையும் விட்டு இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்ந்து வரும் நிலையில் தங்கள் உடைமைகளை மீண்டும் பெறுவதற்காக முயந்சித்து வருகின்றனர்.

பல கோடி ரூபாய் பெறுமதியான இந்தச் சொத்துக்களில் ஒரு பகுதி போரின் போது அழிந்து விட்டது. மிஞ்சிய பொருட்களில் ஒரு தொகுதி ஏற்கனவே தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இங்கே இருந்து 10 ஆயிரம் வரையான சைக்கிள்கள் மீண்டும் வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டு வருவதாகக் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்தப் பொருட்களை சில தனிநபர்கள் செல்வாக்கின் அடிப்படையில் கிழக்கு வன்னிக்குச் சென்று எடுத்து வருவதாகவும் அப்படி எடுத்து வரப்படும் பொருட்களில் ஏனைய பொது மக்களின் பொருட்களும் சேர்த்தே கொண்டு வரப்படுகின்றன என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தங்களுடைய பொருட்களை மீளப்பெறுவதற்கான ஏற்பாட்டை முறைப்படி செய்து தர வேண்டும் எனவும் இந்த ஏற்பாட்டை கால தாமதமின்றி விரைவாகச் செய்து தரும் படியும் இவர்கள் கேட்டுள்ளனர். (2-6)

## சதிகளின் மூலம் எனது வெற்றிக்கு தடை விதிக்க ஆளும் கட்சியினர் முயற்சி செய்கின்றனர்

### மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் தன்னை தோல்வியடையச் செய்வதற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பலவிதமான சதி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கொழும்பு இணையத்தளமொன்றிற்கு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் எனக் கருதப்பட்ட மனோ கணேசன் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.கண்டி மாவட்டத்தில் இதுவரை ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் இல்லை என்ற காரணத்தினால் தாம் போட்டியிட முன் வரவேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவித்தார். கடந்த காலங்களில் அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக முன்னணியில் நின்று தான் செயற்பட்டமையும் ஆளும் கட்சியினரின் சதி முயற்சிகளுக்கு ஒரு காரணம் என்றும் கூறினார்.

தேர்தல்கள் பிரசாரம் ஆரம்பித்த நாள் முதல் தொடர்ச்சியாக மனோ கணேசனின் ஆதரவாளர்களுக்கு எதிராக தாக்குதல்களும் வன்முறைகளும் அரசாங்க தரப்பினாரால் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் தமது வெற்றியில் இன்னும் தாம் நம்பிக்கை வைத் துள்ளதாக மனோகணேசன் தெரிவித்தார். (2-6)

## பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தவர்களின் இராஜதந்திரக் கடவுச்சீட்டுகள் இரத்துச் செய்யப்படவுள்ளன

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அமைச்சர் கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இராஜதந்திரக் கடவுச்சீட்டுகள் அடுத்த வாரம் முதல் இரத்துச் செய்யுப்படும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பட்டாளர் அபயகோன் பண்டா தெரிவித்தார்.

இது குறித்து நாடாளுமன்ற செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இராஜதந்திர கடவுச்சீட்டுகள் இரத்துச் செய்யப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 15 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## நோர்வே இலங்கைத் தூதரகம் மீது தாக்குதல் தொடர்பில் எட்டு தமிழர்களுக்கெதிராக வழக்கு

### கொழும்பு ஊடகம் செய்தி

(கொழும்பு)

நோர்வேயில் இலங்கைத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் எட்டு தமிழர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.வழக்குத் தாக்கல் செய் யப்பட்டவர்களில் அதிகமானவர்கள் இளை ஞர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நோர்வேயின் இலங்கைத் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்களில் ஒருவர் நோர்வேயில் அடைக்கலம் கோரி விண்ணப்பித்துள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றுமொரு நாட்டு அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட பாரிய குற்றச்சாட்டுக்கள் ஏழு பேருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என குற்றம் சுமத்தப்பட்ட எட்டு பேரில் ஏழு பேருக்கு நீதிமன்றில் வாதாட எவரும் இது வரையில் முன்வரவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது . மேலும் தமிழ் சமூகம் இந்தத் தாக்குதலை கண்டிப்பதாகவும் குறித்த நபர்களுக்கு ஆதரவளிப்பதிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாகவும் அந்த ஊடகத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (2-6)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க மிகவும் பொருத்தமானவர் சரத்பொன்சேகாவே

### ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் ஜெனரல் சரத் பொன்சேகாவே என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த பதினான்கு ஆண்டுகளாக எதிர்க் கட்சித் தலைமை எவ்வாறு செயற்பட்டதென்பதை விளங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே வலுவான எதிர்க்கட்சியொன்றின் செயற்பாட்டிற்கு சிறந்த எதிர்க்கட்சித் தலைமை தேவை எனவும் அந்தத் தகுதி தமது கட்சியின் தலைவர் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பவர் தேசிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் தலைவராக இருக்க வேண்டுமென சுட்டிக்காட்டிய அவர் அதிக ஆசனங்களை பெற்றுக் கொண்ட எதிர்க்கட்சியிலிருந்து தலைவர் தெரிவு செய்யப்படுவது வழமை என்ற போதிலும் காத்திரமான எதிர்க்கட்சி செயற்பாட்டிற்காக மரபுகளை மீறுவதில் தவறில்லை என தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண் டுமென புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணிக்கே எதிர்க்கட்சித்தலைமைப் பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளில் அதிகளவு ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கட்சிக்கே தலைமைப்பொறுப்பு வழங்க வேண்டும் எனவும் அதுவே பாராளுமன்ற மரபு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

## அரசாங்கம் அரசியல் விளையாட்டொன்றை நடத்த முயன்றால் சர்வதேசத்திடம் அம்பலப்படுத்தப்படும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன்



(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து கொள்ளாது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புகளுக்கு ஆதர வளிக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டே அரசாங்கத்தின் முனைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் எனவும், இதன்மூலம் இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றல், இராணுவ மயமாக்கலை தடுத்தல் மற்றும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலக்கங்களை அடிப்படையாகக்கொண்டு பாராளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியுமென்ற நிலைப்பாட்டில் தமக்கு உடன்பாடில்லை என்றும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்ற மெய்யான கரிசனை இருந்தால் அதற்கு தமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசாங்கம் அரசியல் விளையாட்டொன்றை நடத்த முயற்சித்தால் அது குறித்து சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்த தாம் தயங்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரியின் மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய கல்லூரியின் வர்த்தகப்பிரிவு மாணவன் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மாணவர் ஆரையம்பதி முதலாம் குறிச்சியைச் சேர்ந்த பதினெட்டு வயதான பார்த்தீபன் கிருசான் என்று கூறப்படுகிறது. இவரின் சடலம் பூநொச்சிமுனை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டு உறவினர்களிடம் காத்தான்குடி பொலிஸாரினால் ஒப்படைக் கப்பட்டுள்ளது. (2-6)

## எஸ்.பி. யின் தேவையற்ற பேச்சுக்களினாலேயே அவர் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிட்டது

### மஹிந்தானந்த அளுத்கமகே

(கொழும்பு)

எஸ்.பி. திஸாநாயக்கவின் தேவையற்ற பேச்சுக்களினாலேயே அவருக்கு இரண்டாண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிட்டதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

எஸ்.பி.திஸாநாயக்கவினால் மேற் கொள்ளப்பட்ட கடுமையான விமர்சனங்கள் அடங்கிய இறுவட்டொன்று தம்மிடம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி ஒழுக்க விதிகளை பேண வேண்டுமென்ற காரணத்தினால் தாம் ஊடங்களுக்கு எவ்வித கருத்துக்களையும் வெளியிடப்போவதில்லை எனவும் அவரின் கருத்துக்கள் தொடர்பில் கட்சித் தலைமைக்கு தாம் ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் இந்த விடயங்கள் பற்றி கட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளார்.

மேலும் தாம் மாவட்டத்தில் முதலாவதாக வருவதனை விரும்பாத கட்சி உறுப்பினர்கள் பல்வேறு வழிகளில் தடையேற்படுத்தி வருவதாக குறிப்பிட்ட அவர் சிலர் எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் விருப்பு வாக்கு தெரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவை வெறும் பகல் கனவே எனவும் தெரிவித்துள்ளார். (2-6)

## பளை மருத்துவமனையை விரைவாக புனரமைத்து முழுமையான சேவையை வழங்க வேண்டும்

### அப்பகுதி மக்கள் கோரிக்கை

பளை பிரதேசத்தில் அமைந்துள்ள மருத்துவமனை மற்றும் சுகாதார திணைக்களம் என்பன போர் சூழலால் முற்றாக சேதமடைந்தமையால் இயங்காது இருந்தது.

தற்போது பளை நகரை அண்டிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியேற தொடங்கியதன் பின்பு தனியாரின் வீட்டில் வைத்து இவ்மருத்துவமனை இயங்கதொடங்கியுள்ளது.

தற்போது வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு மட்டுமே செயற்படுகின்றன. உள் நோயாளர் பிரிவோ அன்றி விசேட சிகிச்சை (கிளினிக்) சேவைகளோ நடைபெறவில்லை. 2006 இற்கு முன்பு இவைஎல்லாம் நடைபெற்றது.

மேலதிக சிகிச்சை பெறவேண்டுமாயின் இப் பகுதி மக்கள் சாவகச்சேரி மருத்துவமனைக்கோ அல்லது யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கோ பலத்த சிரமத்தின் மத்தியில் சென்று சிகிச்சை பெற வேண்டியுள்ளது.

இப்பகுதி நோயாளரின் வசதிகருதி புதிய நோயாளர் காவு வண்டியொன்று சுகாத்தார அமைச்சகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இது இப்பகுதி மக்களுக்கு ஓரளவு உதவியாக இருக்கின்றது.

இப்பகுதி மக்களின் நன்மை கருதி மிக விரைவாக பளை மருத்துவமனையை புனரமைத்து மீளவும் மக்களின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒழுங்கு படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்டோரை இப்பகுதி மக்கள் வேண்டுகின்றனர். (2-22)

# விகிர்தி வருடம் உங்களுக்கு எப்படி?



## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்)

**எதற்கும் கலங்காத மனமும், எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணமும் பெற்ற சிங்கராசி நேயர்களே!**

விகிர்தி வருடம் உங்கள் இராசியை குரு பார்க்கும் விதத்தில் பிறப்பதால் முத்தான வாழ்க்கை அமையப்போகிறது. பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

உங்கள் இராசிநாதனாகச் சூரியன் விளங்குவதால் பிரகாசமான எதிர்காலம் உங்களுக்கு வந்துசேரும்.பிரச்சினைகள் ஒன்று தீர்ந்ததும், ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறதே என்ற கவலை இனி மாறும். வக்ரச் சனியின் இயக்கம் மாறிய பிறகும் வளம் தரும் குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதியும் பொழுதும், சிக்கல்கள் விலகும். சிரமங்கள் குறையும். திடீர் மாற்றங்கள் பலவும் வந்து சேரும்.

சித்திரை 19 ஆம் திகதி அதிச்சாரமாக, 8 ஆம் இடத்திற்கு குரு செல்வதால் கவலைப் பட வேண்டியதில்லை. அதன்பார்வை சுகஸ் தானத்தில் பதிவதால் சுகங்களும் சந்தோஷங்களும் கூடும். சுற்றத்தார் போற்றும் வாழ்வும் அமையும்.

நவக்கிரகங்களில் ராஜகிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் சூரியன் ஆகும்.அதன் ஆதிக்கத்தில் பிறந்த உங்களுக்கு எதிரிகளை வெல்லும் ஆற்றல் எளிதில் உண்டு. மதி யூகத்தால் சில வியூகங்களை அமைத்து மடக்கிவிடுவீர்கள். சமூக சேவை செய்வது உங்களுக்கு பிடித்தமான ஒன்று. சொந்த முயற்சியால் செல்வாக்கைத் தேடிக் கொள்வீர்கள். யாரையும் நம்பிச் செயல்படமாட்டீர்கள்.

சூரியனின் பலத்தைப் பொறுத்தும் புதனின் பலத்தைப் பொறுத்தும் உங்கள் வாழ்க்கைத் தரம் எப்படி அமையும் என்பதைத் தெரிந்து கொள்ள இயலும். அதேசமயம் சுகாதிபதியான செவ்வாயின் பலத்தைப் பொறுத்தே சுயஜாதக ரீதியாகப் பரிகாரங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வதால் இடையூறுகள் அகலும். இனிய வாழ்வு வந்து சேரும்.

உங்கள் ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதை ஆராய்ந்து அதன் பாதசார அடிப்படையில் கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையம் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் எதிர்காலம் இன்பங்களை சந்திக்கும் காலமாக அமையும்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியைக் குரு பார்க்கிறார். 5,8க்கு அதிபதியான குருபார்ப்பதால், மிஞ்சும் அளவிற்குப் பொருள்தார நிலை உயரும். இதுவரை ஏழரைச் சனியால் ஏற்பட்ட இன்னல்கள் இனிக்குறையும். வாழ்வில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வீர்கள்.

பன்னிரண்டாம் இடத்திற்கு அதிபதி சந்திரன் எட்டாமிடத்தில் சஞ்சரித்து, விபரீத ராஜயோகத்தை ஏற்படுத்தும் விதத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் திட்டமிடாது செய்யும் சில காரியங்களில் வெற்றி காண்பீர்கள். திடீர் மாற்றங்கள் பலவும் வந்து சேரலாம்.

ஏழரைச்சனியால் பாதகச் சனி என்று வர்ணிக்கப்படும் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெறுகிறது. பொதுவாக முதல் சுற்று நடப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடக்கவேண்டும்.இரண்டாவது சுற்று நடப்பவர்களுக்கு ஏதேனும் ஒரு சிலநேரங்களில் மனக் குழப்பங்களைக் கொடுத்தாலும் கடைசி நேரத்தில் காரியம் கைகூடி வரும். மூன்றாவது சுற்று நடப்பவர்கள் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செயல்படுவது நல்லது.

விகிர்த்தி ஆண்டில் 5ஆம் இடத்தில் இராகுவும்,11ஆம்இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள்.எனவே புத்திரர் வழியில் உள்ள பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வெளிநாட்டுப் பயணங்கள் வந்து சேரலாம். குழந்தைகள் நலன் கருதி ஒரு தொகையைச் செலவிட்டு அவர்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பீர்கள். சர்ப்ப சாந்திகளைச் செய்து இராகு-கேதுக்களின் வழிபாட்டையும் மேற்கொண்டால் குழந்தைகளின் முன்னேற்றம் கூடும் என்பதைஅறிந்து கொள்ளுங்கள்.

மீனராசியில் குரு சங்சரிக்கும் பொழுது அது எட்டாமிடமாக அமைவதால் திடீர் ஊர் மாற்றம்,இடமாற்றம் உத்தியோக மாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். குடும்பம் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்து ஒன்று சேர முடியவில்லையே என்ற கவலை மேலோங்கலாம்.

எட்டில் குரு வந்தால்
இடமாற்றம் உருவாகும்!
விட்டுக் கொடுப்பதனால்
வெற்றி வந்து சேர்ந்து விடும்!
பெட்டி பணம் அனைத்தும்
பெரிதும் செலவாகும்!
பற்றொடு குருவதனை
பணிந்தால் நலம் சேரும்!

என்றுஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் எட்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது இடமாற்றம், ஊர்மாற்றங்கள் வருவது நியதி. உத்தியோகத்தர்களுக்கு மாற்றங்கள் வந்துசேரலாம். தொழில் பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். இருப்பினும் அதன் பார்வை பலத்தால் 2ஆம்இடம், 4ஆம் இடம்,12ஆம் இடம் ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. பஞ்சமாதிபதியின் பார்வை அதில் பதியும் பொழுது மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும்.

கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். கூட்டுக் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். திடீர்ப் பயணங்கள் தித்திக்க வைக்கும். ஸ்தல வழிபாடுகளுக்கு குடும்பத்துடன் சென்று மகிழ்வீர்கள். வியாழன் விரதமும், முறையான குருவழிபாடும் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

இடம்,பூமி வாங்கிக் குடியேற இயலவில்லையே என்ற ஏக்கம் மாறும்.வருடத் தொடக்க முதல் வைகாசி 12ஆம் திகதி சனி வக்ரம் பெறுகிறார்.

மீண்டும் தை 8 ஆம் திகதி முதல் பங்குனி 30 ஆம் திகதிவரை சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிக்கும் 6,7க்கு அதிபதியான சனிவக்ரம் பெறுவதால் உத்தியோகத்தில் திடீர் திருப்பங்கள் உருவாகும். தொழிலில், கூட இருப்பவர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.எதிரிகளின பலம் கூடும்.

மற்றவர்களுக்குப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேர்வதில் தாமதம் ஏற்படலாம். வீடு மற்றும் தொழில் நிலையங்களை விரிவாக்கும் முயற்சியில் செலவிடுவது நல்லது. வாழ்க்கைத் துணை வழியே அனுசரித்துச் செல்வதன் மூலமே மன நிம்மதியைக் காண இயலும். பதவிகளில் உள்ளவர்களுக்குப் பொறுப்புகள் மாறலாம்.சனி பகவானை வழிபட்டு வந்தால் மணியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

ஆடி 5ஆம் திகதி முதல் ஆவணி 20 ஆம் திகதி வரை கன்னி ராசியில் செவ்வாயுடன் சனி சேர்க்கை பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. சொத்து விரயங்களும், விலை உயர்ந்த பொருட்களை விற்பனை செய்யும் சூழ் நிலையும் உருவாகலாம். இக்காலத்தில் அங்காரக வழிபாடு உங்கள் அல்லல்களைத் தீர்க்கும்.

சித்திரை மாதம் 19 ஆம் திகதி (2.5.2010) முதல் ஐப்பசி மாதம் 20 ஆம்திகதி (6.11.2010) வரை மீன ராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப்போகிறார். ஐப்பசி 21ஆம் திகதி வரை மீன ராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப் போகிறார். ஐப்பசி 21 ஆம் திகதி (7.11.2010) முதல் கார்த்திகை 4ஆம் திகதி (20.11.2010) வரை கும்பராசியில் குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். கார்த்திகை 5ஆம் திகதி மீண்டும் மீன ராசியில் குரு முறையாகச் சஞ்சரிக்கப் போகிறார். இந்தப் பொன்னான குருவின் சஞ்சாரம் வாழ்க்கைப் பாதையில் எண்ணற்ற மாற்றங்களை வழங்கப் போகிறது. குருவின் பார்வை என்னவெல்லாம் கொடுக்கும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

வருடத் தொடக்கத்தில் 7 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கிறார். அங்கிருந்தபடியே 1,3,11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.

அதன் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், ஆரோக்கியம் சீராகும். பாயில் படுத்தவர்கள் பம்பரமாய்ப் பணிபுரிவர்.

நோய் இருந்த இடம் தெரியாமல் மறையும். உற்சாகத்தோடும், தன்னம்பிக்கையோடும் செயல்படத் தொடங்குவீர்கள். மூத்த சகோதரத்தால் வந்த தொல்லை அகலும். முன்னேற்றம் கூடும்.வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வளர்ச்சிக்கு வித்திட நண்பர்களும், உறவினர்களும் போட்டி போட்டுக்கொண்டு உதவி செய்ய முன் வருவர்.

### சிவல்புரி சிங்காரம்

உமாமகேஸ்வரர் வழிபாடு உங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சியையும், இல்லத்திற்கு இனிமையையும் சேர்க்கும்.

விகிர்தி ஆண்டில் குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். சொத்துக்களை வாங்கி அதை விற்பதன் மூலம் பெரும் இலாபம் கிடைக்கலாம். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அஷ்டமத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் தேவையில்லாத பிரச்சினைகள் தலைதூக்கும். எதையும் யோசித்துச் சொல்வது நல்லது. வாக்கு வாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும் என்றாலும் சேமிக்க இயலுமா என்பது சந்தேகம்தான். இராகு - கேதுக்களுக்குரிய வழிபாடுகளை மேற்கொண்டால் குழந்தைகள் நலம் கூடும். (தொடரும்)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும் -சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டுமென ஜாதிகஹெல உறுமய கட்சியின் சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் சாசன திருத்தங்களின் போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்க்ளை கட்டுப்படுத்துவது குறித்த இரண்டு முக்கிய சட்டத் திருத்தங்கள் மஹிந்த சிந்தைனைக் கொள்கைத் திட்டத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்படவுள்ளன.

தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அடிப்படையில், ஓராண்டு காலத்தின் பின்னர் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரம் காணப்படுவதாகவும் இதனை மாற்றியமைக்க வேண்டும் எனவும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஜனாதிபதியும் கட்டுப்பட வேண்டும் என்ற வகையில் சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதியை நீதியின் முன் நிறுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# தேசியப்பட்டியல் ஊடாக புத்திஜீவிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் -டியூ குணசேகர

தேசியப் பட்டியல் ஊடாக புத்திஜீவிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட் வேண்டுமென முன்னாள் அரசியல் சாசன அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அரச வானொலி சேவை ஒன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில் சார் வல்லுனர்கள் மற்றும் புத்திஜீவிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதன் மூலம் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரியமுறையில் பட்டியல்கள் தயாரிக்கப்படாவிட்டால் புத்திஜீவிகள் பாராளுமன்றத்திற்கு செல்லமுடியாத நிலை ஏற்படும் எனக் குறிப்பிட்ட அவர் தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமானதென தெரிவித்துள்ளார். (2-6)

### புதிய அரசியல் சாசனத்தினூடாக

# வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு சுயநிர்வாகம் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது -அரசாங்கம்

புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான விடயங்கள் உள்ளடக்கப்படுமேயன்றி, அந்த மாகாணங்களிற்கான சுய நிர்வாகம் மற்றும் பொலிஸ் அதிகாரம் ஒருபோதும் வழங்கப்படமாட்டாது என அரசாங்கம்,ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்குலக நாடுகளுக்கு அறிவித்துள்ளது.

எட்டு நாடுகளில் விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பினர் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்தி, தமிழ் மக்கள் சுய நிர்வாகத்திற்கு விருப்பம் கொண்டுள்ளதாக அந்த நாடுகளின் தலைவர்களிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பாகவே அரசாங்கம் இந்த நிலைப்பாட்டினை வெளியிட்டுள்ளது.

தேர்தலில அமோக வெற்றி பெற்றுள்ள அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என மேற்குலக நாடுகளின் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கமைய புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக அதிகாரம் பரவலாக்கப்படுமாயின், நேரடியான வெளிநாட்டு உதவிகள் பெறுதல், பொலிஸ் அதிகாரம், இராணுவ முகாம்களை அகற்றுதல், கனிய வளம் உள்ளிட்ட ஏனைய வளங்களின் உரிமைகளை வடக்கு-கிழக்கு மக்களுக்கு வழங்க வேண்டும் என தமிழ் கட்சிகள் வெளிநாட்டு தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ளதாக தெரிய வந்துள் ளது.

இந்த நிலையில் தன்னாட்சி நிர்வாகம் கோரி தமிழ் மக்களை தூண்டிவிடும் தமிழ்க் கட்சிகளை தடைசெய்யும் வகையில் புதிய சட்டங்களைக் கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. (2-6)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07

## கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை -2010

## வழிகாட்டல் பரீட்சை

### வணிகக்கல்வி :- பகுதி II-I

தொடர்ச்சி.......................

**21 தொடக்கம் 30 வரையான வினாக்களிற்கு கோடிட்ட இடத்தில் மிகச்சரியான விடையினை எழுதுக.**

21. வணிகமொன்றின் ஓரலகு உள்ளீட்டிற்கான சராசரி வெளியீட்டினளவு ..................... என அழைக்கப்படும்.

22. முகாமைத்துவம் என்பது ................................ எனும் செய்முறையாகும்.

23. கம்பனியொன்றின் தலைவரை ................................ மட்ட முகாமையாளராகக் கருதப்பட முடியும்.

24. வணிக நிறுவனமொன்று தனது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான சந்தைப்படுத்தல் தத்துவம்............................என அழைக்கப்படும்.

25. மானிடத்திறன் என்பது ஒரு முகாமையாளரிடம் காணப்படும் ................................ திறன் எனக் கருத முடியும்

26. வணிகமொன்று அடையவேண்டிய இலக்கினையும் குறிக்கோளையும் நிர்ணயிக்கும் முகாமைத்தொழிற்பாடு .................................... என அழைக்கப்படும்.

27. வளங்களை ஒன்றுதிரட்டுதலும் ஒதுக்கீடு செய்தலும் ................................... என்ற முகாமைத் தொழிற்பாடு ஆகும்.

28 ................................ என்பது தொழிற்பகுப்பின் மூலம் ஏற்படும் பிரதான விளைவாக அமையும்.

29. ஊழியரொருவர் தனது மேலதிகாரிகளுக்கு அறிக்கையிடவேண்டிய எண்ணிக்கை சார்ந்த எண்ணக்கரு ........................................ என அழைக்கப்படும்.

30. முன்னோக்கிய கட்டுப்பாட்டு(Forward controlling)........................................ ...................... கட்டுப்பாட்டு முறையாகக் கருதமுடியும்.

**31 தொடக்கம் 40 வரையான வினாக்களிற்கு மிகச்சரியான விடையினை எழுதுக.**

(31) ஒழுக்கமைத்தலின்(Oraganization)மிகப் பிரதான வடிவங்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

32. அதிகாரங்கள்(Authorities),பொறுப்புக்களின்(Responsibilities)தன்மையினடிப்படையில் முகாமையாளர்களின் வகைகள் எவை?

..........................................................................................

..........................................................................................

33. அதிகாரக் கையளித்தலின்(Delication of Authorities)பிரதான எண்ணக்கருக்கள் இரண்டு தருக?

..........................................................................................

..........................................................................................

34. வணிக ஒழுங்கமைப்பொன்றில் காணப்படக்கூடிய தொடர்பாடல் பாய்ச்சல் வலைப் பின்னங்கள் இரண்டு தருக.

..........................................................................................

..........................................................................................

35. இருபத்தியோராம் நூற்றாண்டிற்குரிய இரு நவீன முகாமைத்துவக் கோட்பாடுகளைத் தருக?

..........................................................................................

..........................................................................................

36. அமைப்பு வரைபடமொன்றின் மூலமான நன்மைகள் இரண்டு தருக?

..........................................................................................

..........................................................................................

37. உற்பத்தித் தொழிற்சாலையொன்றில் பொறிகள் பொருத்தக்கூடிய இரு பிரதான முறைகள் தருக.

..........................................................................................

..........................................................................................

38. உற்பத்திப் பொருளொன்று தொடர்பான மட்டங்கள் எவை?

..........................................................................................

..........................................................................................

39. நுகர்வோரால் தொடர்ச்சியாகவும் குறைந்தளவு முயற்சியுடனும் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்.

..........................................................................................

40. சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின்(Marketing concept)பிரதான அடிப்படை யாது?.

..........................................................................................

### வணிகக்கல்வி :- பகுதி II-II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட மொத்தமாக நான்கு வினாக்களிற்கு விடை தருக.**

01. 1. முயற்சியாண்மை (Enterpreneurship) தொடர்பான செய்முறையின் 04 பிரதான படி முறைகளைத் தருக?

2. முயற்சியாளன் ஒருவருக்கு இருக்கக்கூடிய பிரதான பண்புகள் 06 தருக?

3. திட்டமிடல் (Planning) ஏனும் முகாமைப்பணியின் முக்கியத்துவங்கள் 06 தருக?

4. வணிக ஒழுங்கமைப்பு ஒன்றிற்கும் அதன் வாடிக்கையாளருக்குமிடையிலான பரஸ்பர உறவினை விளக்குக.

5. வியாபாரப் பெயர்(Brand name)ஒன்றின் அடிப்படை இயல்புகளைத் தருக?

6. பொதியிடல்(Package)என்பதன் அடிப்படைத் தொழிற்பாடுகளை தருக?
(06 X 03 = 18 புள்ளிகள்)

02. 1. வணிக ஒழுங்கமைப்பு ஒன்றிற்கு சாதகமான வணிக சந்தர்ப்பங்கள் 06 தருக?

2. சிறிய நடுத்தர முயற்சியாளர்களிற்கு ஆலோசனைச் சேவை, தொழில் நுட்பச் சேவை சந்தைப்படுத்தல் சேவை வழங்கக்கூடிய நிறுவனங்கள் இரண்டு தருக?

3. வணிகமொன்றினால் தீட்டப்பட்டுள்ள திட்டமானது தோல்வியடைவதற்கான பிரதான காரணங்கள் எவை?

4. ஒழுங்கமைத்தல் தொடர்பாக திணைக்களப்படுத்தலின் (Departmentalisation) அடிப்படைகள் 03 குறிப்பிட்டு விளக்குக?

5. சந்தைப்படுத்தல் சூழல் (Marketing Environment) என்பதனை வகைப்படுத்தி விளக்குக?

6. சந்தைப்படுத்தல் எண்ணக்கருவிற்கும் (Marketing concept) வாடிக்கையாளர் எண்ணக்கருவிற்கும் இடையிலான(Customer concept)வேறுபாட்டினைத் தருக?
(06 X 03 = 18 புள்ளிகள்)

03) 1. திட்டமிடலுடன் (Planning Principles) தொடர்புடைய தத்துவங்கள் 06 குறிப்பிட்டு விளக்குக?

2. அதிகாரக்கையளிப்பின்(Authority Delication)பிரதான செய்முறைகளைக் குறிப்பிடுக?

3. கட்டுப்பாட்டின் விசால அளவு (Span of control) என்பதனால் கருதப்படுவது யாது? அதன் வகைகளைக் குறிப்பிட்டு நன்மைகளை இனங்காண்க?

4. அதிகாரம்(Authority), பொறுப்பு(Responsibility), வகை கூறுதல்(Accountability), என்பதனை விளக்குக?
(04 X 03 = 12 புள்ளிகள்)

04 1. ஒவ்வொரு வணிக அமைப்புக்களிற்கும் தலைமைத்துவம்(Leader ship)அவசியம் என்பதற்கான காரணங்கள் 03 குறிப்பிடுக?

2. நிறுவனமொன்றின் தலைவர் (Leader), முகாமையாளர் (Manager) ஆகியோருக் கிடையிலான 03 வேறுபாடுகள் தருக?

3. கட்டுப்படுத்தல்(Control)என்பதனையும், அதன் படி முறைகளையும் தருக?

4. உற்பத்திப் பொருள் அபிவிருத்தி தொடர்பான படி முறைகள்(Production process) எவை?
(04 X 03 = 12 புள்ளிகள்)

05. 1. தொழிற்சாலையொன்றினை ஒரு பிரதேசத்தில் அமைப்பதன் மூலம் அப் பிரதேச மக்களும் சூழலும் பெறக்கூடிய நன்மைகளும் சவால்களும் 03 தருக?

2. சந்தைப்படுத்தல் கலவை(Marketing Mix)என்பது யாது? அதன் உள்ளடக்கங்களை குறிப்பிட்டு விளக்குக?

3. பண்டக் குறியினையும்(Brand name), வியாபாரக் குறியினையும்(Trade Mark) ஒப்பீடு செய்க?

4. தொழிற்சாலையொன்றில் இயந்திரங்களின் தள அமைப்பு முறைகள்(Layout) 03 குறிப்பிடுக. விளக்குக?
(04 X 03 = 12 புள்ளிகள்)

06. 1. உற்பத்தியாளன் ஒருவருக்கு இலாபநட்டமற்ற புள்ளிப்பகுப்பாய்வின்(Break even point) நன்மைகள் 03 தருக?

2. சந்தைப்படுத்தல் தொடர்பான எண்ணக்கருக்கள் 06 குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

3. சந்தைப்படுத்தல் வழிகள்(Marketing channels)03 குறிப்பிட்டு விளக்குக?

4. உற்பத்திப் பொருள் மட்டங்களைக் குறிப்பிட்டு விளக்குக?
(04 X 03 = 12 புள்ளிகள்)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07

## கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை -2010

## வழிகாட்டல் பரீட்சை

### கணக்கீடு- பகுதி -I Accounting -Part -I

*1 மணித்தியாலங்கள்* *1Hours*

**சகல வினாக்களுக்கும் விடை தருக.**

**இலக்கம் 01 தொடக்கம் 20 வரையானவற்றுக்கு மிகச் சரியான விடையினை தெரிவு செய்க.**

01. குறித்த கணக்காண்டின் இறுதியிலிருந்து அடுத்த எதிர்வரும் கணக்காண்டிற்கு முன் கொணரப்படும் கணக்குகளை கொண்ட தொகுதியை பிரதிபலிப்பது,
 1.உரிமைத்துவம்,வருமானம் ,செலவு
 2.சொத்துக்கள் ,பொறுப்புக்கள், உரிமைத்துவம்
 3.வருமானம், செலவுகள், சொத்துக்கள்
 4.சொத்துக்கள்,செலவுகள்,பொறுப்புக்கள்
 5.பொறுப்புக்கள்,செலவுகள்,உரிமைத்துவம்

02.வணிக கொடுக்கல் வாங்கலொன்று இடம்பெற்றதற்கான அத்தாட்சியாக கருதப்படுவது,
 1.துணை ஏடுகள் 2.பொதுப்பேரேடு 3.பொதுக்குறிப்பேடு
 4.பரீட்சை மீதி 5.மூல ஆவணங்கள்

03.கணக்கீட்டு நியமனங்களுக்கமைய நிதியறிக்கைகளை தயாரித்தலும் முன்னிலைப் படுத்தலும் இடம்பெறும் வேண்டும் என்பதனை வலியுறுத்துவது,
 1.2007 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டம் 2.1840 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டம்
 3.தேசிய இறைவரித் திணைக்களம்
 4.1995 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க கணக்கீட்டுக்கும் கணக்காய்வுக்கான சட்டம்
 5.பங்குடமைச் சட்டம்

04.பெறுமானத்தேய்வு தொடர்பான மிகப் பொருத்தமான விளக்கம்,
 1.பாவனை காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படும் குறைவு.
 2.நிலையான சொத்துக்களின் ஆயுட்காலத்தில் ஏற்படும் பொருளாதாரப் பெறுமதி வீழ்ச்சி
 3.நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்விடக் கூடிய தொகையினை அதன் ஆயுட்காலம் முழுவதற்கும் பகிர்ந்தளித்தல்
 4.சொத்துக்களில் ஏற்படக்கூடிய காலக்கழிவு
 5.ஆதன முடிவுறுத்தலின் போது ஏற்படும் இழப்பு

05.வணிகத்தின் ரூபா 500,000 பெறுமதியான பண்டங்கள் தீயினால் அழிவடைந்தது. காப்புறுதி நிறுவனத்தினால் இழப்பில் 75 வீதம் ஈடுசெய்யப்பட்டது. உரிமையாளர் இப்பணத்தில் சொந்த நுகர்வுக்கான தளபாடங்களை கொள்வனவு செய்தார். இதற்குரிய எப்பதிவும் ஏடுகளில் இடம்பெறவில்லை. சரியான திருத்தப்பதிவாக அமைவது,
 1.காசுக் கணக்கு- வரவு ரூபா 375,000
  இருப்புக் கணக்கு -செலவு ரூபா 375,000
 2.எடுப்பனவு கணக்கு-வரவு ரூபா 375,000
  இருப்பு நட்டக்கணக்கு -வரவு ரூபா 125,000
  கொள்வனவுக் கணக்கு-செலவு ரூபா 500,000
 3.இருப்பு நட்டக் கணக்கு-வரவு ரூபா 125,000
  காசு கணக்கு -வரவு ரூபா 375,000
  கொள்வனவுச் கணக்கு-செலவு ரூபா 500,000
 4. இருப்பு நட்டக்கணக்கு -வரவு ரூபா 125,000
  காப்புறுதி கம்பனி கணக்கு-வரவு ரூபா 375,000
  இருப்பு கணக்கு-செலவு ரூபா 500,000
 5.இருப்பு நட்டக் கணக்கு -வரவு ரூபா 125,000
  காசுக்கணக்கு -வரவு ரூபா 375,000
  மூலதனக் கணக்கு -செலவு ரூபா 500,000

வினா இலக்கம் 06,07 என்பவற்றுக்கு கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.

2009.12.31 இல் *ரன்தரு* விளையாட்டு கழகத்தின் வருமான செலவுக் கணக்கில் அங்கத்துவச் சந்தாக் கட்டணம் ரூபா 100,000 இடம்பெற்றிருந்தது. 2009 ஆம் ஆண்டு தொடக்கத்திலும்,இறுதியிலும் சந்தா தொடர்பான தரவுகள் வருமாறு,

| | வருட தொடக்கம் | வருட இறுதி |
|---|---|---|
| வருமதி சந்தாப்பணம் | ரூபா 12,000 | ரூபா 15,000 |
| முற்பணமாகப் பெற்ற சந்தாப்பணம் | ரூபா 2,000 | ரூபா 5,000 |

06.பெறுவனவு,கொடுப்பனவு கணக்கில் சந்தாப்பணம் என இடம்பெற்றிருக்கக்கூடிய தொகையாக அமைவது,
 1.ரூபா 102,000 2.ரூபா 105,000 4.ரூபா 100,000
 4.ரூபா 112,000 5.ரூபா 115,000

07.இக்கழகத்தில் 2009 ஆம் ஆண்டு 500 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றிருப்பின் அங்கத்தவர் ஒருவரிடமிருந்து வசூலித்த வருடாந்த சந்தாத் தொகை யாது?
 1. ரூபா 500 2. ரூபா 200 3.ரூபா 260
 4. ரூபா 275 5. ரூபா 204

08.பல வருடங்களுக்கு முன்பு ரூபா 300,000இற்கு கொள்வனவு செய்த இயந்திர மொன்று 2009.12.31 இல் ரூ50,000ற்கு விற்கப்பட்டது. இவ்வியந்திரத்தின் திரண்ட தேய்வு ரூபா200,000 ஆகும்.இவ்வியந்திரம் தொடர்பாக இலாபநட்டக் கணக்கில தாக் கல் செய்யும் தொகையாக அமைவது,
 1. இலாப நட்டக் கணக்கிட்கு ரூபா 50,000 செலவு வைக்கப்படும்
 2.இலாப நட்டக் கணக்கிட்கு ரூபா 100,000 வரவு வைக்கப்படும்.
 3.இலாப நட்டக் கணக்கிட்கு ரூபா 100,000 செலவு வைக்கப்படும்
 4. இலாப நாட்டக் கணக்கிட்கு ரூபா 50,000 வரவு வைக்கப்படும்
 5.இலாபநட்டக் கணக்கில் எப்பதிவும் இல்லை.

**வினா இலக்கம் 09,10 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

நிறுவனத்தின் ஆரம்பத் தொக்கு ரூபா 100,000, கொள்வனவுகள் ரூபா 400,000, இறுதித்தொக்கு ரூபா 500,000, விற்பனையில் 25% சதவீத இலாபம் சேர்த்து விற்கப்படுமாமயின் ,

09.விற்பனை வருமானமாக அமைவது,
 1.ரூபா 500,000 2.ரூபா 550,000 3.ரூபா 350,000
 4.ரூபா 600,000 5.ரூபா 450,000

10. கிரயத்தில் இலாப வீதமாக குறிப்பிடப்படுமாயின்,
 1.20% 2.33 1/3 % 3. 25 % . 4.16 2/3% 5.18 %

11.2009.12.31 இல் கம்பனியின் கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு நிலுவை ரூபா 300,000, அவ்வருடம் கடன்கொடுனருக்கு செலுத்திய தொகை ரூபா 500,000 கணக் காண்டில் மொத்தக் கொள்வனவு ரூபா 100,000. 2009.01.01 இல் கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு நிலுவையாக அமைவது,
 1.ரூபா 800,000 2.ரூபா 500,000
 3.ரூபா 300,00 4.ரூபா 700,000 5.ரூபா 200,000

12.எந்தவொரு வியாபாரத்தினதும் தேறிய இலாபங்களை மிகச் சரியாக கணிப்பதற்கு,
 1. காசு அடிப்படையில் கணக்குகளை தயாரித்தல்
 2.வணிகத்தை மூடும் பொழுது
 3.அட்டுறு அடிப்படையில் கணக்குகளைத் தயாரித்தல்.
 4.பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு அடிப்படைக்கமைய கணக்குகளைத் தயாரித்தல்
 5. வணிகத்தை மூடும் பொழுதோ அல்லது தொழிற்பாடுகளை நிறுத்தும் பொழுது

13. பொதுப்பேரேட்டில் கடன்படுனர், கடன்கொடுனர் கட்டுப்பாட்டு கணக்குகளை பராமரிக்கும் நிறுவனம் தொடர்பான மிகச் சரியான கூற்று,
 1.பொதுப் பேரேட்டில் இரட்டைப் பதிவுமுறை காணப்படும். பிரிவுப் பேரேட்டில் இரட்டைப் பதிவுமுறை காணப்படாது
 2.இரு பேரேடுகளிலும் பரீட்சை நிலுவை கட்டாயமாகத் தயாரிக்கப்படும்
 3.இரு பேரேடுகளிலும் (தனி) ஒரு பதிவு முறை காணப்படும்.
 4.பொதுப் பேரேட்டில் இரட்டைப் பதிவு முறை காணப்படாது
 5.இரு பேரேடுகளிலும் இரட்டைப் பதிவுமுறை காணப்படும்.

14.திரவச் சொத்து என குறிப்பிடப்படுவது,
 1.பணத்தினால் மதிப்பிடப்பட்ட சொத்துக்களாகும்
 2.காசும்,காசுக்கு சமமானவையும் உடனடியாக பணமாக மாற்றக்கூடியவையும்
 3.நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கழித்தபின் உள்ளதொகை
 4.மொத்த சொத்துக்களிலிருந்து நடைமுறைப் பரிப்புக்களை நீக்கியதொகை
 5.நடைமுறை சொத்துக்களிலிருந்து நடைமுறைப்பரிப்புக்களை நீக்கிய தொகை.

**வினா இலக்கம் 15,16 என்பவற்றுக்கு விடையளிக்குக. கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

2007.12.31 இல் கடன்படுனர் நிலுவை ரூபா 32000, கடன்படுனர் லாலின் நிலுவை ரூபா 2800 அறவிடமுடியாதென பதிவழிக்க முடிபு செய்ததுடன்,மிகுதி கடன்படுனரில் 5 % ஐயக்கடன் ஏற்பாடாக பராமரிக்க முடிபு செய்யப்பட்டது.

2008.12.31 இல் கடன்பட்டோர் நிலுவை ரூபா 52000, கடன்படுனர் சிறிலின் நிலுவை ரூபா 2000 அறவிடமுடியாதென பதிவழிக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன் ,மிகுதி கடன்படுனரில் 05% இவ்வருடமும் ஐயக்கடன் ஏற்பாடாக பராமரிக்க முடிபு செய்யப்பட்டது. அறவிடமுடியாக்கடனை பதிவழிக்கவும் ஐயக்கடன் ஏற்பாட்டினை மேற்கொள்ளவும் ஒரே கணக்கு பராமரிக்கப்படுமாயின் அறவிடமுடியாக்கடன் ,ஐயக்கடன் என்பவற்றுக்கு குறிப்பேட்டு பதிவாக அமைவது,

15.2007.12.31 இல் முடிவுற்ற ஆண்டு தொடர்பில்,
 1.அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடனும் கணக்கு-வரவு ரூபா 2800
  ஐயக்கடன் ஏற்பாட்டுக்கு கணக்கு- செலவு ரூபா 2800
 2.அறவிடமுடியாக்கடன் கணக்கு -வரவு ரூபா 2800
  கடன்பட்டோர் லால் கணக்கு -வரவு ரூபா 2800
 3.அறவிட முடியாக்கடனும் ஐயக்கடனும் கணக்கு -வரவு ரூபா 4260
  ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு -செலவு ரூபா 1460
  கடன்படுனர் லால் கணக்கு - செலவு ரூபா 2800
 4.ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு -வரவு ரூபா 4260
  அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடனும் கணக்கு - செலவு ரூபா 4260
 5. ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு -வரவு ரூபா 2800
  அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடனும் கணக்கு - செலவு ரூபா 2800

16.2008.12.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நாட்குறிப்புப் பதிவாக அமைவது,
 1.அறவிடமுடியாக் கணக்கு-வரவு ரூபா 2000
  சிறில் கணக்கு-செலவு ரூபா 2000
 2.ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு-வரவு ரூபா 3040
  அறவிட முடியாக்கட்னும் ஐயக்கடனும் கணக்கு -செலவு ரூபா 3040
 3.ஐயக்கடன் ஏற்பாட்டுக்கணக்கு- வரவு ரூபா 3040
  கடன்படுனர் கணக்கு-செலவு ரூபா 3040
 4.அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடனும் கணக்கு -வரவு ரூபா 3040
  ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு-செலவு ரூபா 1040
  கடன்படுனர் சிறில் கணக்கு-செலவு ரூபா 2000
 5.அறவிடமுடியாக்கடன் கணக்கு-வரவு ரூபா 3040
  கடன்படுனர் சிறில் கணக்கு -செலவு ரூபா 3040

**வினா 17,18 என்பவற்றுக்கு விடையளிக்க. கீழ்வரும் தரவுகளை பயன்படுத்துக.**

| இருப்பு | இருப்பு வகை | கணியளவு | கிரயம் (ரூபா) | அலகொன்றின் தேறக்கூடிய நிகரப் பெறுமதி |
|---|---|---|---|---|
| A | $A_1$ | 100 | ரூ 80 | ரூ 100 |
| | $A_2$ | 150 | ரூ 60 | ரூ 50 |
| B | $B_1$ | 100 | ரூ 70 | ரூ 80 |
| | $B_2$ | 200 | ரூ 90 | ரூ 100 |

17. இருப்புக்களை தனித்தனி உறுப்படிகளாக கருதும் அடிப்படையில் இருப்பின் பெறு மதியாக அமைவது,
 1. ரூ.32000 2. ரூபா 30000 3. ரூபா 40000
 4. ரூபா 41000 5. ரூபா 40500

18.இருப்புகளின் குழு அடிப்படை (தொகுதி) யிலான பெறுமதியாக அமைவது,
 1.ரூபா 34500 2. ரூபா 43000 3. ரூபா 45500
 4.ரூபா 42000 5. ரூபா 34000

# களம் பல கண்ட யாழ் கோட்டை 8

## றைக்ளோப் வன் ஹூன்ஸ்


21 ஜுன் 1658

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கேயர் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தனர். கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. போர்த்துக்கேயரின் கொடி இறக்கப்பட்டு ஒல்லாந்தரின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டது. கோட்டையிலிருந்து வெளியேறுவோர் அணிந்திருந்த உடைகளை மட்டுமன்றி வேறெதையும் எடுத்துச் செல்லக் கூடாது எனக் கொமுசாறி வன்ஹூன்ஸ் கட்டளையிட்டிருந்தான். கோட்டையை விட்டு வெளியேறிய ஆண், பெண் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டனர். ஈவிரக்கமின்றி அவமானகரமான இச் செயலை ஒல்லாந்தர் செய்தனர். ஒரு சிறு பொருளைக் கூடச் சரணடைந்தவர்கள் தம்முடன் எடுத்துச் செல்ல ஒல்லாந்தர் அனுமதிக்க வில்லை.


சரணடைந்த போர்த்துக்கேய வீரர்க ளைக் கப்பல்களில் ஏற்றிக் கோவாவிற்கும் பத்தேயாவிற்கும் அனுப்பி வைத்தான். தண்டிக்கப்படவேண்டிய இராணுவ அதிகாரிகளை நார்டென் கப்பலில் ஏற்றிக் கைதிகளாக ஒல்லாந்த வைஸ்ரோயின் விசாரணைக்காகப் பத்தேயாவிற்கு அனுப்பி வைத்தனர். குடும்பமாக இருந்த போர்த்துக்கேய வீரர்கள் அவர்களது இந்தியாக் குடியேற்றமான கோவாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். போர்த்துக்கேயக் கன்னிகளையும் விதவைகளையும் ஒல்லாந்தர் தம்முடன் தடுத்து வைத்துக் கொண்டனர்.

போர்த்துக்கேயப்படையில் வேலை செய்த பலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருக்க ஒத்துக்கொண்டனர். மலபார் வீரர்களில் பலரும் பறங்கிகளில் சிலரும் அவ்வாறு சேவையில் தொடர்ந்திருக்க ஒப்புதல் வழங்கினர்.

யாழ்ப்பாணக் கோட்டையின் வீழ்ச்சியுடன் போர்த்துக்கேயரின் சாம்ராச்சியம் இலங்கையில் அஸ்தமித்தது. கோட்டையின் வீழ்ச்சிக்குப் பல காரணங்களிருந்தன. கொமு சாறி வன்ஹூன்சின் முற்றுகை மார்ச் 16 ஆம் திகதியிலிருந்து ஜுன் 21 ஆந் திகதிவரை நீடித்ததால் கோட்டைக்குள் ஏற்பட்ட உணவுத்தட்டுப்பாடும் பரவிய நோய்களும் அவர்களைச் சரண டையத் தூண்டின. இலங்கையின் ஏனைய பகுதிகள் எல்லாவற்றிலும் கோட்டைகளை இழந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையை மட்டும் தம்வசம் வைத்திருப்பதில் பயனில்லை என்ற உணர்வு. தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாவும் ஒரே வேளையில் ஒல்லாந்தப்படை தாக்குமென அவர்கள் எதிர்பார்க்கவில்லை. நீண்டகால முற்றுகையின் பின்னர் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதலால் கொத்தளங்கள் சிதைந்தன. கோட்டை மதில்கள் தகர்ந்து போயின. துப்பாக்கி மருந்துக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் தட்டுப்பாடேற்பட்டது. உண வில்லாமையினால் இறந்தவர்களை விட ஒல்லாந்தரின் பயங்கரமான எறி பொறிகள் ஈவிரக்கமின்றி வீசிய கற்களுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இவையாவும் போர்த்துக்கேயரைச் சரணடைய வைத்தன.



யாழ்ப்பாணக்கோட்டைக்குள் அமைந்திருந்த ஒல்லாந்தரின் தேவாலயம் (ஹெய்ட் என்பவரின் வரைபு–1744)



போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக்கோட்டை அதன் கிழக்குப் பாகத்தில் அமைந்துள்ள சீதாரி (பறங்கித்தெரு நகரம்) வடக்கே காணப்படும் பெரியகடை (நகரம்) (வலன்ரைனின் வரைவு –1726)

யாழ்ப்பாணக் கோட்டை பிடிபட்டதும் ஒல்லாந்தத் தளபதி பத்தேவியாவிலுள்ள வைஸ்ரோயிக்குப் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்தான்:

இலங்கையின் இறுதிப் பிரதேசமான யாப்னாப் பட்டினத்தை இன்று கைப்பற்றினோம். ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையும் யாப்னாக் கோட்டையும் இலகுவில் எங்களால் கைப்பற்றப்பட்டன. இச்சண்டையில் எதிரிகள் பக்கத்தில் 117 பேர் கடற்கோட்டையிலும் 700 பேர் யாப்னாக் கோட்டையிலும் கொல்லப்பட்டனர். 800 பேரைக் கைதிகளாக்கியுள்ளோம். எங்கள் தரப்பில் 98 ஒல்லாந்தர் இறந்தனர். 100 பேர்வரையில் கூலிப் படையில் இறந்தனர். 23 பேர் கடும் காயமடைந்தனர்.

யாப்னாப் பட்டினம் வளமானது. அரிசி, பருத்தி, சாயவேர், யானைகள், உப்பு என்பன இப்பட்டினத்திலுள்ளன. சுதேசிகள் சிறிய உருவத்தினர். பணிவானவர்கள். அவர்களில் பலர் விவசாயிகளாகவும் நெசவாளர்களாகவும் சாயம் போடுபவர்களாகவும் உள்ளனர். அடங்கி வாழப் பழக்கப்பட்டவர்கள்.

கோட்டைக்குள் கைதானவர்கள் எப்பொருளையும் எடுத்துச் செல்ல நான் அனுமதிக்கவில்லை. கோட்டையைக் கைப்பற்றியபோது அகப்பட்ட பொருட்களை ஒல்லாந்தக் கம்பனிக்குரியனவாகப் பதிவேட்டில் பதிந்து பேணியுள்ளேன். சாயவேர் பல சாக்குகளில் அகப்பட்டன. 340 அடிமைகள் கிடைத்தனர். 30 ஆயிரம் பற்றாகோஸ் பெறுமதியான தங்கம், வெள்ளி ஆபரணங்கள் கொண்ட சிறு புதையல் ஒன்றும் கோட்டைக்குள் அகப்பட்டது.

முஸ்லிம் வர்த்தகர்களுக்கு விற்பதற்காக ஆனைப்பந்தியில் கட்டிவைக்கப்பட்டிருந்த 27 யானைகளையும் எமக்குரியதாக்கி விட்டேன். இந்த யானைகளுக்குப்போர்த்துக்கேயர் மதித்திருக்கும் விலை குறைவு. இவற்றினை முஸ்லிம் வர்த்தகர்களுக்கு நல்ல விலையில் விற்கவுள்ளேன். அத்துடன் இவற்றுள் 10 யானைகளைச் சோழ மண்டலக் கவனர் பிற்றிற்கு அனுப்பவுள்ளேன்.

எங்களுக்குப் பீரங்கிக்குண்டுகள் தேவை. 12 தொட்டு 24 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளில் 3000 அனுப்பிவைக்கவும். 2 இறாத்தல் தொட்டு 4 இறாத்தல் நிறைவரையிலான குண்டுகளில் 2000 அனுப்பிவைக்கவும். பத்தேவியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட துப்பாக்கி மருந்துகள் சிறந்ததாகவிருந்தது. இனிமேல் யாப்னாப் பட்டினத்திலேயே கண்பவுடரைத் தயாரிக்கலாம் என நினைக்கிறேன்.

பார்வைக்கு அழகான விதவைப் பெண்களையும் கலியாணமாகாத கன்னிப் பெண்களையும் இங்கு தடுத்து வைத்துள்ளேன். எங்களுடைய போர்வீரர்களுக்கு அவர்களைக் கலியாணம் செய்து கொடுக்கவுள்ளேன். குடும்பமாகவிருந்து அகப்பட்ட போர்வீரர்களை அவர்களின் கோவாவிற்கும் ஏனை யோரை பத்தேவியாவிற்கும் அனுப்பி வைக்கிறேன். அவர்களைச் சிறையில் வைப்பதோ போர்த்துக்கல்லிற்கு அனுப்புவதோ உங்கள் சித்தத்தைப் பொறுத்தது...... என்றவாறு றைக் ளோப் வன்ஹூன்சின் அறிக்கை அமைந் தது.

**செங்கை ஆழியான்**

(தொடரும்)

Corporate Skills
The Business English Unit of
THE ACADEMY OF ENGLISH AND DRAMA, COLOMBO
'Seeing education as an investment'
www. corpskills.asia

English Language Teaching Unit
ST JOHN'S COLLEGE, JAFFNA.
T.P : 021 222 2432

IMPROVE YOUR PROFESSIONAL SKILLS !
- Customer Care
- Etiquette-improve your Professional Image
- Telephone Skills
- Letter Writing
- Corporate Language

A FOUR - DAY COURSE
28th April - 1st May 2010 at St John's College
ADMISSION FREE
Limited places - Register before 26th April 2010 at St John's College.
(c-110)

## ஐஸ்லாந்து எரிமலை குமுறலால் இலங்கை ஐரோப்பா இடையிலான விமானசேவைகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

ஐஸ்லாந்தில் எரிமலைக் குமுறலினால் ஏற்பட்ட சாம்பல் புகை மூட்டம் காரணமாக இலங்கை மற்றும் ஐரோப்பா இடையிலான விமான சேவைக்ள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.




ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் வான்பரப்புகள் மூடப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமென கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் குறிப்பிட்டார்.

இதற்கமைய நேற்று முன்தினம் பிற்பகல் 11.15க்கு லண்டன் நோக்கிப் புறப்படவிருந்த விமானத்தின் பயணம் இரத்துச் செய்யப்பட்டதாக ஸ்ரீலங்கா விமான சேவை நிறுவனத்தின் முகாமையாளர் ரொஷானி மாச கொறன தெரிவித்தார்.

இதன் காரணமாக விமான சேவைகள் தொடர்பாக பயணிகள் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக விசேட தகவல் நிலையமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரொஷானி மகாகொறன தெரிவித்தார்.

இந்த நிலையத்தின் 0197335500 என்ற தொலைபேசி இலக்கமூடாக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டார்.(2-3)




புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையமும் அம்பாள் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்திய மாபெரும் விளையாட்டு நிகழ்வில் அம்பாள் விளையாட்டுக்கழக உறுப்பினர் பி.சதீஸ் வரவேற்புரை நிகழ்த்துவதையும், க.லோகநாதன் தலைமையுரையாற்றுவதையும், புங்குடுதீவு பங்குத் தந்தை ஆம்ஸ்ரோங் ஆசியுரை நிகழ்த்துவதையும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதமவிருந்தினர் உரை நிகழ்த்துவதையும் மேலுள்ள படங்களிலும்,வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கேடயங்களை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புங்குடுதீவு கடற்படைத்தளபதி ஆகியோர் வழங்குவதையும், கடற்படை வீரர் ஒருவருக்கு கிராம அலுவலர் சந்திரா நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஞான வைரவசுவாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

அலங்கார உற்சவ காலங்களில் தொடர்ந்து பன்னிரெண்டு தினங்களும் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி.காரை. எம்.பி. அருளானந்தனின் சிறப்பு சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளது. (6)

## தையல், மனைப்பொருளியல் கண்காட்சி

(வேலணை)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைகளத்தில் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறும்.

இக்கண்காட்சியும் விற்பனை செயற்படும் யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகர் திருமதி.ந. ஜெயராஜன் தலைமையில் நடைபெறும். முதன்மைவிருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2-22)

## வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 5மணிக்கு நவநாள் வழிபாடு நடைபெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. (2)

## இறைச்சியின் விலையை குறைத்து விற்கவும்

(திருநெல்வேலி)

வன்னிப் பகுதியிலிருந்து வடமராட்சிப் பகுதிக்கு இறைச்சி வகைகள் எடுத்து வரப்படுவதால் இப்பகுதியில் இறைச்சியின் விலை வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இதன்படி ஒரு கிலோ மாட்டிறைச்சி 350 ரூபாவிலிருந்து 300 ரூபாவுக்கும் அதனை விட மலிவாகவும் வெளியே விற்கப்படுகின்றது.

ஆனால் இறைச்சிக்கடைகளில் தொடர்ந்தும் கூடுதல் விலைக்கே விற்கப்படுவதாகவும், எனவே கடைகளிலும் அதன் விலையை குறைத்து விற்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-43)

## முன்பள்ளி ஆசிரியர் பொதுக்கூட்டம்

வலி கிழக்குப் பிரதேச கோப்பாய்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதேசசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (2)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி பாடசாலைகளில் தரம் 2 இற்கு ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று திங்கட்கிழமையும் தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களிற்கு ஆங்கிலப் பாடம் போதிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## தற்காலிக வீடுகளை வழங்கி உதவவும்

(திருநெல்வேலி)

வன்னிப் பகுதியில் யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து மீள்குடியேறிய மக்களுக்கான தற்காலிக வீடுகளை உடன் வழங்க ஆவன செய்யுமாறு உரியவர்களிடம் இடம்பெயர்ந்தோர் அமைப்பின் தலைவர் வே. தவச்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-43)

## குணநல உள்ளீடு தொடர்பான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலை அதிபர்களுக்கான குணநல உள்ளீடு தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 23ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பாடசாலையின் அனர்த்தம் பாதுகாப்புக் குழுவின் விவரத்தினையும், அனர்த்த பாதுகாப்புக்குழு பொறுப்பாசிரியரின் பெயரினையும் கொண்டு வருமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (2-29)




## குளத்தை மூடி சல்பீனியா தாவரம்

(வேலணை)

பாழ்.கஸ்தூரியார் ஸ்ரான்லி வீதி சந்தியின் கிழக்கு பக்கமாகவுள்ள குளம் அண்மையில் துப்பரவு செய்யப்பட்டது. இருந்தும் இக்குளத்தின் மேல்பகுதியில் குளத்துநீர் தெரியாமல் சல்பீனியா என்ற தாவரம் படர்ந்து காணப்படுகின்றது.

இவ்சல்பீனியா தாவரம் குளத்தினை மூடி படர்ந்து இருப்பதுடன் இப்பகுதியில் நுளம்பு தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாக சூழலாளர்கள் கவலை வெளியிடுகின்றனர். (2-22)

## க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

செல்வராஜா சனோ-9ஏ, எட்வேட் ரவீந்திரராஜாப் பிரவிந்தன்-9ஏ, பரஞ்சோதி சாகித்தியன் -9ஏ,

சிவானந்தம் தபிரா-8ஏ,பி, நாகராஜா தர்ஜிகா - 8ஏ,பி, செல்வரத்தினம் லக்ஸ்மியா - 8ஏ,சி,பாலகுமார் பரந்தாமன் - 8ஏ

சண்முகானந்தசர்மா விசாகன் -7ஏ,2பி, தவராஜா அனோஜன் - 7ஏ,2பி, கமலநாதன் சிந்துஜன் - 7ஏ,2பி, சண்முகநாதன் ஜெயதர்சன் -7ஏ,2பி, நல்லதம்பி கஜீபன் - 7ஏ,2பி, கனகராஜா அபிராமி -7ஏ,2பி, வேலாயுதபிள்ளை வானதி - 7ஏ,2சி, குணசேகரம் சரண்யா - 7ஏ,2பி

சிவகுமாரன் சசிகரன் -6ஏ,பி,2சி, ரவீந்திரன் மயூரி - 6ஏ,2பி,சி, மகேந்திரராஜா கார்த்திகா - 6ஏ,பி, சி, மகேந்திரன் கேதாரணி -6ஏ,பி,சி

நகுலேஸ்வரன் கவிப்பிரியா - 5ஏ,2சி, 2எஸ், செல்வரத்தினம் சிவதர்சினி - 5ஏ,3சி,எஸ், சடாட்சரம் அனுஷா - 5ஏ,2பி, சி,எஸ், தனபாலசிங்கம் சதீசன் -5ஏ,பி, 2சி, ஜெயசீலன் ஜனந்தன் - 5ஏ, 2பி, 2சி,

யோகேஸ்வரன் டினோஜன் - 5ஏ,சி, 2எஸ், பாலசுப்பிரமணியம் அனிதா - 5ஏ, 3சி, எஸ், சிவஞானசுந்தரம் மாதுரி -5ஏ,2பி, 2எஸ், உலகநாதன் கிருத்திகா - 5ஏ,4சி, சுப்பிரமணியம் றேசியா -5ஏ,பி, 3சி, குலராஜசிங்கம் சௌபிகா -5ஏ,2சி, 2எஸ்.

(29)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கண்ணாடிப்பிட்டி மயானம் புனரமைப்பு

(வேலணை)

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. இதன் முதல் கட்டமாக 18 இலட்சம் ரூபா செலவில் மயானத்தினுள் புதிய இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

1996 சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது இவ் இந்து மயானமானது உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் சென்றது. இதன் காரணத்தால் பொதுமக்கள் பயன்படுத்த தடையானது. இதனுள் மண்டபம் உட்பட மதில்சுவர்களும் சேதமாகியது.

2009 ஆம் ஆண்டு மீளவும் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-22)

## தென்மராட்சி வலயத்திலிருந்து
# மாவட்ட மட்ட தமிழ்த்தின போட்டிக்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக் கிடையே நடத்தப் பெற்ற வலய மட்ட தமிழ்த் தினப் போட்டி 2010 முடிவுகளின் அடிப் படையில் 1ஆம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்கு கலந்துகொள்ளவுள்ள மாணவர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்களை இன்று திங்கள் காலை 10 மணிக்கு தென்மராட்சிப் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆக்கம் எழுத்து** *பிரிவு 1-* க.பிரவிந்தன் (நுணாவில் கிழக்கு அமிதாம்பிகை மகா வித்தியாலயம்), **கட்டுரை வரைதல்** *பிரிவு 2-* இ.தர்சனா - (கொடிகாமம் திருநாவுக்கரசு), *பிரிவு 3-* சி. லக்சிகா (கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை), **கட்டுரை இலக்கியம் நயத்தல்** *பிரிவு 4-* இ.சங்கீதா (கொடிகாமம் அ.த.க.பாடசாலை), *பிரிவு 5-* ப.கஜீதா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), **இலக்கணப்போட்டி** *பிரிவு 4-*செ. நிசாந்தினி (கச்சாய் அ.த.க.பாடசாலை), *பிரிவு 5-* க.சஞ்சீவன்(மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), **திறனாய்வு** *பிரிவு 5-* செ.ஜன்சா (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்) , **குறுநாடக ஆக்கம்** *பிரிவு 4-* ஜெ.லாவண்யா (சாவ. இந்துக்கல்லூரி), *பிரிவு 5-* க.துவாரகன் (வரணி மகாவித்தியாலம்), **சிறுகதை ஆக்கம்** *பிரிவு 4-* அ.கஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), *பிரிவு 5-* ந.நிதர்சனா (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), **வாசிப்பு** *பிரிவு 1-* சி. அபர்ணா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), *பிரிவு 2-* சி.லக்சனா ( மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை), **ஆக்கத்திறன் வெளிப்பாடு** *பிரிவு 1-* ப.சாம்பவி( மட்டுவில் சந்திரமௌலீசா), **பேச்சு** *பிரிவு 1-* செ.இளங்கதிர் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), *பிரிவு 2-* ந.லிருசனன்(விடத்தப்பளை கமலாசினி), *பிரிவு 3-* மோ.டிலோஜனி-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்) *பிரிவு 4-*சி.ரூபகானன் (மீசாலை வீரசிங்கம்), *பிரிவு 5-* சி.பவித்திரா (மீசாலை வீரசிங்கம்)

**பாவோதல்** *பிரிவு 1-* த.அஜித்தா (மிருசுவில் அ.த.க.பாடசாலை), *பிரிவு2-* பு.பிரதீபா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), *பிரிவு 3-*வி.கார்த்திகாயினி(கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), *பிரிவு 4-* இ.லபீனா (வரணி மகா வித்தியாலயம்), *பிரிவு 5-* த.கௌசலா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்).

**இசையும் அசைவும்** *பிரிவு 1-* சோ. நிவேதிகா(சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) **இசை (தனி)** *பிரிவு 2-* ஸ்ரீ.சுலக்சன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலம்) *பிரிவு 3-* சி.சரண்யா( மட்டுவில் சந்திர மௌலீசா), *பிரிவு 4-* ஜெ.லோஜனா (கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை), *பிரிவு 5-* சி.ஸ்ரீரேகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), **இசை (குழு)** *பிரிவு 1-* திறந்த போட்டி ( கைதடி நாவற்குழி மகா வித்தியாலயம்), *பிரிவு 2-*திறந்த போட்டி ( சாவகச்சேரி இந்துக் கல்லூரி) , **நடனம்** *பிரிவு 2-* இ.வித்தகி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), *பிரிவு 3 -* த.துஜந்தினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), *பிரிவு4 -* வி.சானுஜா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), *பிரிவு 5-* சு.அபிஷேகாயினி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), **நடனம் குழு** *பிரிவு 1-* திறந்தபோட்டி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), **நாட்டார் பாடல்** திறந்த போட்டி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), இலக்கிய **நாடகம்** திறந்த போட்டி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), **வில்லுப்பாட்டு** திறந்தபோட்டி (மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), **விவாதம்** திறந்தபோட்டி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), **தமிழ் அறிவு வினா விடை**(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

## திருமுறிகண்டி சூழலில் தமக்கு
# வாணிபம் செய்ய அனுமதியில்லை
### அப்பகுதி வர்த்தகர்கள் கவலை தெரிவிப்பு

ஏ-9 வீதியூடானான பயணம் ஆரம்பிக் கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் முறிகண்டிப் பகுதியில் தனியார் வர்த்தகர்கள் வாணிபம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் மீண்டும் தாம் வாணிபத்தை தொடர்வதற்கு அனுமதிக்க வேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக முறிகண்டிப் பகுதியில் வர்த்தக நடவடிக் கையில் தனியார் வர்த்தகர்களே ஈடுபட்டு வந்தனர். அவர்களே இந்தக் கோவில் வளாகத்தை மேம்பாடடையச் செய்தும் வந்தனர்.

போர்க்காலங்களில் கூட மிகுந்த சிரமங்களின் மத்தியில் இந்தப் பகுதியில் தாக்குப் பிடித்து நின்று கோவிலையும் பராமரித்து வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டு மக்களுக்கான சேவைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால், இப்போது போர் முடிந்து விட்டது. மீளவும் இயல்பு நிலை ஏற்பட்டிருக் கும் போது தமக்கான வாணிப அனுமதியைப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஆணை யாளர் மறுத்திருப்பதாகவும் பதிலாக விசுவமடு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே வழங் கியிருப்பதாகவும் அப்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த காலத்தில் ஒரு சந்தர்ப்பத்திலாவது இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தப் பிரதேசத்தின் மேம்பாட்டுக்காக சிறு உதவியைக் கூடச் செய்திருக்காத நிலையில் தமக்கான அனுமதியை மறுத்து பிரத்தியேகமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கியது எதற்காக என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதேவேளை காலந்தாழ்த்தாது தமக்கு நியாயமான அடிப்படையில் மீளவும் வாணிப அனுமதியை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-6)

## பசில் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்குமாறு
# ஆளும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை

**திவயின செய்தி**

(கொழும்பு)

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், சகோதரருமான பசில் ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கு நியமிக்குமாறு கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கோரிக்கை விடுத்து வருவதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்களும், கூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் சிறுகட்சிகளும் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன. நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய சிறந்த ஆளுமை பசில் ராஜபக்ஷவிடம் காணப்படுவதாக குறித்த கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ராஜதந்திர ரீதியில் அண்மைக்காலமாக அவர் வெளிப்படுத்திய அபார திறமை, பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் என்பதனை பறைசாற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் சார்பில் போட்டியிட்ட பசில் ராஜபக்ஷ நாட்டில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட வேட்பாளராகக் கருதப்படுகின்றார். (2-6)

## ஐ.தே.க.தேசியப்பட்டியல் நியமனம்
# இன்று பூர்த்தியாக்கப்படும் -கருஜயசூரிய

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பட்டியல் இன்று பூர்த்தியாக்கப்படும் என அக்கட்சியின் பிரதித்தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களில் பலர் தேசியப்பட்டியலுக்கு விண்ணப்பித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சிக்கு நான்கு பிரதித்தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியையும் அவர் நிராகரித்துள்ளார். (2-6)

## வட இலங்கை சங்கீத சபையின்
# கருத்தரங்கும் செயலமர்வும்

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் வதிவிடக் கருத்தரங்கும் செயலமர்வும் இறுதி நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சபையின் செயலாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வணிக பீடாதிபதி பேராசிரியர் தேவராசா கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சங்கீதம்,நடனம், பண்ணிசை ஆகிய துறைகளைச் சேர்ந்த 27 பேருக்கு கலாவித்தகர் விருது வழங்கப்படவுள்ளது.(2)

# யாழ்.பல்கலையில் பொதுக்கலைமாணி பட்டம் பெற்ற
# இனிய வாழ்வு இல்ல மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு







படங்கள்:- கங்கா

(யாழ்ப்பாணம்)

இனிய வாழ்வு இல்லத்தில் கல்வி பயின்று யாழ் பல்கலைக்கழகத்தில் பொதுக் கலை மாணிப்பட்டம் பெற்ற நான்கு மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியிலுள்ள இனிய வாழ்வு இல்லத்தில் இடம்பெற்றது.

இனிய வாழ்வு இயக்குனர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேரவை உறுப்பினர் சிறிபதியும் சிறப்பு விருந்தினர்களாக கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட் தந்தை ஜெயக்குமார், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் தலைவர் கே.ரி. கணேசலிங்கம், சமூகசேவைகள் மாவட்ட திட்ட இணைப்பாளர் தி.கிருபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கே.அருந்தாகரன், யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் கலந்து கொண்டனர். வள்ளிபுனம் 17 ஆம் கட்டை புதுக்குடியிருப்பு என்ற முகவரியில் முன்பு இயங்கி வந்த இந்த இல்லம் ஊனமுற்றோர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் செயற்பாடாக அவர்களின் கல்வி நடவடிக்கையை முன்னெடுத்து வந்தது அவ்வேளையிலேயே மேற்படி நான்கு மாணவர்களையும் யாழ். பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தது.

பிண்பு வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இவ்வில்லச் செயற்பாடுகள் செயலிழந்து இருந்து தற்போது ஆத்திசூடி வீதியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (2-5)

# காற்றாலை மூலம் மின்விநியோகத் திட்டம்

(வேலணை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட எழுவைதீவு கிராமத்துக்கு 24 மணி நேரமும் மின்விநியோகம் செய்வதற்கு ஆராயப்படுகின்றது.

இதன் முதல்கட்டமாக இத்தீவு கடல்பகுதியால் சூழப்பட்டிருப்பதால் காற்றாலை மூலம் மின்பிறப்பாக்கியை இயக்கி மின்சாரத்தை பெற்றுக்கொள்ள மின்சார சபை கடந்த வாரம் ஆராய்ந்துள்ளது.

இது தொடர்பாக மின்சாரசபையின் ஆய்வுக்குழுவினரால் மக்களிடம் கேள்விக் கொத்து ஒன்று வழங்கப்பட்டுள்ளது. தற்போது இரவுவேளைகளில் 4மணிநேரமும் காலையில் 1.30 மணிநேரமும் தான் மின் விநியோகம் நடைபெறுகின்றது. (2-22)

எல்லாம் வெளிமயக்கே
இறைவா கச்சி ஏகம்பனே
-பட்டினத்தார்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## முதுமைக்கு உதவி புரியாத முதுமையின் (கலைஞரின்) ஆட்சி பாரீர்

தமிழகத்தின் கடந்த கால செயற்பாடுகள் தமிழ் உறவுகளை நோகடிப்பதாக அமைந்துள்ளன.

தமிழ்-தமிழ் அதுவே என் மூச்சு என்று கூறும் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் ஆட்சிக்காலத்திலேயே உலகெங்கிலும் தமிழ் மக்கள் அச்சுறுத்தலுக்கும் அழிவுக்கும் ஆட்பட்டனர்.

பேசவும், எழுதவும் தெரியும் என்பதற்காக அதுவே தமிழ்ப் பற்றும், பாசமுமாகி விடாதென்பதற்கு கலைஞர் கருணாநிதி நல்ல உதாரணம்.

அலங்கார வார்த்தைகளால் தமிழ் மக்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட முடியாது.

உள்ளும் புறமும் தமிழ் உணர்வு பாய வேண்டும். அந்த உணர்வு தமிழக முதல்வராக இருந்த எம்.ஜீ.இராமச்சந்திரனிடம் இருந்ததை எவரும் மறுக்க மாட்டார்கள்.

குறிப்பாக ஈழத்தமிழர்கள் மீது எம்.ஜீ.இராமச்சந்திரன் அளவு கடந்த அன்பும் இரக்கமும் கொண்டிருந்தார்.

ஆனால் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஈழத்தமிழர் மீது பற்றுக் கொண்டவர் போல பாசாங்கு செய்தார்.

அவரின் உண்ணாவிரத நாடகம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இதுவாயினும் தன் குடும்பத்திடம் தமிழகத்தின் அரசியல் தலைமையை ஒப்படைக்கும் அவரின் அயராத முயற்சி, அதற்காக மத்திய அரசுடன் சேர்ந்து தாளம் போடும் அவரின் கபடத்தனம் என அத்தனையும் சேர்ந்து பல்லாயிரக் கணக்கான ஈழத்தமிழர்களை வன்னி யுத்தத்தில் பலிகொடுக்க வேண்டியாயிற்று.

வன்னியில் நடந்த யுத்தத்தின் போது தமிழகம்- தமிழக முதல்வர் கொதித்திருந்தால் இந்த அளவு அழிவுகள் ஏற்பட்டிருக்கமாட்டா.

என்ன செய்வது! எங்கள் கெடுகாலம் தமிழகத்தின் ஆட்சி பீடத்தில் வார்த்தைஜால நடிகர் மு.கருணாநிதி இருந்துவிட்டார்.

அதனால் அத்தனை துன்பங்களையும் தமிழ் மக்கள் அனுபவித்தனர். அனுபவித்து வருகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கும் போது, மலேசியாவில் இருந்து தமிழகத்திற்குச் சென்ற விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் திருமதி பார்வதியம்மாவை சென்னை விமானநிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பி தமிழகம் மீண்டுமொரு கோழைத்தனமான தவறை இழைத்துவிட்டது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்காக அவரின் தாயாரை திருப்பி அனுப்புவது என்பது தமிழகத்தின் புத்தியாக இருக்க முடியுமேயன்றி உலகில் வேறெங்கும் இந்த அநீதி இடம்பெறமாட்டாது.

முதுமை நிறைந்த பார்வதியம்மாவை திருப்பி அனுப்பிய, தள்ளாடும் முதுமை கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இதற்கு கவிதை பாடியா? கவலை கொள்வார்.

அட! நெஞ்சுக்கு நீதி எழுதிய பின்பாவது நெஞ்சம் இரங்க வேண்டாம்.

எல்லாம் பொய், எல்லாம் வேடம், எல்லாம் பாசாங்கு இதன் ஒட்டுமொத்த வடிவம் கலைஞர் கருணாநிதி என்பதை இந்தியாவை நம்பி- பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பார்வதியம்மாவை திருப்பி அனுப்பியமை கண்டும் மெளனமாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்து கொள்வதாக.

## ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார்

(கொழும்பு)

ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8.45 மணிக்குக் கூடவிருப்பதாக அறிவித்திருக்கும் பாராளுமன்றச செயலாளர் நாயகம் தம்மிக கித்துல்கொட தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு முன்னர் சபையில் அமரவேண்டுமெனவும் தெரிவித்திருக்கிறார்.

முதலாவது சபை அமர்வின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமூகம் தந்து உரையாற்றவிருப்பதுடன் அன்றைய தினம் சபாநாயகர் தெரிவுடன் உப சபாநாயகர் குழுக்களின் செயலாளர், சபை முதல்வர் ஆகியோரின் தெரிவுகளும் இடம் பெறவிருக்கின்றன. இதனையடுத்து சபை அமர்வு ஒத்தி வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு ஆரம்பமாவதற்குச் சமாந்தரமாக இன்று காலையில் மகா சங்கத்தினர்களுக்கான தானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். இந்த வைபவங்களிலும் பங்கேற்குமாறு தெரிவு செய்யப்பட்ட சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற அதிகாரி மற்றும் ஊழியர்களுக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்திருக்கின்றார். (2-6)

## நாவலப்பிட்டி, கும்புறுப்பிட்டி பகுதிகளில் வன்முறை ஏற்படக்கூடிய அபாயம்

(கொழும்பு)

நாவலப்பிட்டி, கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் ஒரு சில குழுவினரின் தவறான வழிநடத்தல்களின் மூலம் வன்முறைகள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதிகளில் நாளை நடைபெறவிருக்கும் மீள் தேர்தலில் எந்தவித அச்சமுமின்றி வாக்களிக்குமாறு பொது மக்களிடம் பொலிஸ் தலைமையகத்தின் தேர்தலுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன கோரிக்கை விடுத்தார்.

மேற்படி இரண்டு பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

மேலும் நாவலப்பிட்டி மற்றும் கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## அனைத்துக்கட்சிகளுடனும் பேசியே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்

### டி.யு.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினை என்பது ஒரு தேசியப் பிரச்சினை. தமிழ் மக்களின் பிரச்சினை என்பதால் தமிழ்க் கட்சிகளுடன் கட்டாயம் பேசப்படவே வேண்டும்.

ஆனால் தீர்வு என்று வரும்போது அனைத்துக் கட்சிகளுடனும் பேசித்தான் தீர்வு காண வேண்டும். தமிழ் மக்கள் ஆதரிக்கும் கட்சிகளுடன் என்று மட்டுமல்லாமல் தமிழ் மக்கள் ஆதரிக்கும் கட்சிகளுடனும் பேசப்பட வேண்டும் .அந்த வகையில் எமது கட்சியையும் சேர்த்துக்கொள்ளலாம் என கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது எமது கட்சிப் பிரதிநிதிகள் தமிழர்களால் தெரிவு செய்யப்படதாவர்களாக இருக்கலாம். ஆனால் தேசியப்பிரச்சினை என்று வரும் போது அனைவருடனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஆதரித் துள் ளனர் என்பதற்காக அவர்கள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதி நிதிகள் என்று கூறமுடியாது. நாங்கள் இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியான நாம் இன, மத, பிரதேச வேறுபாடுகள் கடந்த நிலையிலேயே செயலாற்றுகிறோம். ஆகவே தமிழ் மக்களின் பிரச்சினை விடயத்தில் அனைத்துக்கட்சிகளுடனும் பேசியே ஆக வேண்டும். இதனையே மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மேலும் புலிகளோ பிரபாகரனோ பிரச்சினைகளை உருவாக்க வில்லை. பிரச்சினைகள்தான் புலிகளையும் பிரபாகரனையும் உருவாக்கின. பிரச்சினைகள் ஒன்று இருந்ததால் தான் இவ்வாறான அமைப்புக்கள் உருவாகின என்றார். (2-6)

## கிழக்கு மாகாணத்தின் பாசிக்குடா கடற்கரைக்கு வரும் மக்கள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

தமிழ் -சிங்கள விடுமுறையை கழிப்பதற்காக கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாப் பகுதியினான பாசிக்குடா கடற்கரைக்கு உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் பெருமளவில் வருகை தருகின்றனர். குறிப்பாக தென்னிலங்கையை சேர்ந்த பெரும்பான்மை இன மக்கள் இங்கு வருகை தருவதுடன் படகு சவாரி, கடற்குளிப்பு, வினோத விளையாட்டு ஆகியவற்றில் வயது வேறுபாடின்றி அனைவரும் பங்கு கொள்வதை காணமுடிகிறது.

தற்போது நாட்டில் நிலவும் அமைதியான சூழ்நிலையால் மக்கள் அச்சமின்றி மகிழ்வுடன் விடுமுறையை களிப்பதை அவதானிக்க முடிவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவு தகவல் தெரிவிக்கின்றது. 30 வருடங்களின் பின்னர் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் பாசிக்குடாவிற்கு வருகை தருவது குறிப்பிடத்தக்கது. (2-6)

## ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியின் ஆசனங்களில் அமர வேண்டிய நிலை

(கொழும்பு)

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. வழமையாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமர்வதற்காக 130 ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்ற போதிலும் இம்முறை ஆளும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 140 ஆக உயர்வடைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் முதலில் சபாநாயகர் தெரிவு இடம் பெறும் எனவும் முற்பகல் 11 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏழாவது நாடாளுமன்றத்தில் முதலாவது உரையை ஆற்றுவார் எனவும் குறிப்பிடப்படுகிறது. (2-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### பல்சுவை

கவலைப்பட வேண்டாம். பெரிய மரத்தின் மீதுதான் புயற்காற்று மோதுகிறது ; கிளறி விடுவதனால் நெருப்பு மேலும் நன்றாக எரிகிறது. தலையில் அடிபட்டு பாம்பு படமெடுக்கிறது என்று இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம்.

நெஞ்சு புண்பட்டு வேகும்போதும் துன்பப் புயல் நம்மைச் சுற்றி நாலாபுறங்களிலும் வீசும்போதும் இனி வாழ்க்கையில் ஒளியையே காண முடியாதா என்று தோன்றும். போதும் நம்பிக்கையும் துணிவும் கிட்டத்தட்ட அறவே நம்மை விட்டு அகன்று விட்டபோதும் அப்படிப்பட்ட ஒரு பெரிய ஆன்மீகப் புயல் சூழ்ந்த நிலையின் நடுவில்தான் பிரம்மத்தினுடைய ஒளி நமது உள்ளத்தினுள் பிரகாசிக்கிறது.

# பார்வதி அம்மையார் சென்னையில் சிகிச்சைபெற

# தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



மனிதாபிமான அடிப்படையில் பிரபாகரனின் தாயாரை சென்னையில் சிகிச்சை பெற மத்திய அரசுக்கு, தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

அவர் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தனது கணவர் காலமான செய்தியைக் கூட தெரிந்து கொள்ள முடியாத நிலையில் நோய்வாய்ப்பட்டிருக்கும் பார்வதி அம்மையார், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து சென்னைக்கு வந்தார் என்றும், அவரை சென்னை விமான நிலையத்தில் இறங்கவிடாமல், தடுத்து விமான நிலையத்திலேயே பல மணிநேரம் உட்காரவைத்து, பின்னர் அதே விமானத்தில் மலேசியாவுக்கு திருப்பி அனுப்பி வைத்து விட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

சென்னை நகரில் மிக நவீன மருத்துவ சிகிச்சை கிடைப்பதால் தான் 80 வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் அந்த அம்மையார், இங்கே சிகிச்சை பெற வந்திருக்கிறார். இந்தியாவுக்கு வருவதற்கான அனுமதியினை கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் அவருக்கு வழங்கியிருக்கிறது. இந்தியத் தூதரகம் அனுமதி வழங்கயிருக்கிறது என்றால், இந்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்றுதான் பொருள். அப்படியிருந்தும், சென்னை நகரில் அவரை இறக்கி விடாமல் தடுத்து நிறுத்தி, மீண்டும் மலேசியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு காரணமானவர்கள் யார்? நிச்சயமாக தமிழக அரசும் தமிழக பொலிஸாரும் இதனை செய்திருக்கமாட்டார்கள். அதற்கான அதிகாரம் அவர்களுக்கு இல்லை. மேலும், முன்பு ஒருமுறை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் பாலசிங்கம் மற்றும் சந்திரகாசன் ஆகியோரை சென்னையில் இருந்து வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டபோது, அதை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கி தடுத்து நிறுத்தியவர் கருணாநிதி. எனவே, அவரது அரசு இதனை செய்திருக்காது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள குடியேற்றத்துறை அதிகாரிகள்தான் இச்செயலை செய்திருக்கக்கூடும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு அதிகாரம் படைத்தவர்கள் அவர்கள்தான். அவர்களது அனுமதியின்றி வெளிநாட்டவர் எவரும் இந்தியாவுக்குள் நுழைய முடியாது. சென்னை விமான நிலையத்தில் உள்ள குடியேற்றத்துறை அதிகாரிகள் தன்னிச்சையாக இந்த நடவடிக்கையை எடுத்திருக்கமாட்டார்கள். மத்திய அரசின் அனுமதி இல்லாமல், அவர்கள் கட்டளையிடாமல் இங்குள்ள குடியேற்றத்துறை அதிகாரிகள் செயல்பட்டிருக்கமுடியாது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கை மனிதாபிமானமற்றது என்பதில் சந்தேகமில்லை. உலகில் எந்தவொரு நாட்டிலும் இதுபோன்ற மனிதநேயமற்ற செயல் நடந்ததாக வரலாறு இல்லை. எவ்வளவு பெரிய குற்றம் செய்திருந்தாலும், மனிதாபிமான அடிப்படையில் சிகிச்சை பெற அனுமதிப்பது தான் உலக நாடுகள் கடைப்பிடித்து வரும் நடைமுறை.

நமது பகை நாடுகளை சேர்ந்தவர்களும், நமக்கு எதிரான நாடுகளைச் சேர்ந்தவர்களும் இங்கே வந்து, சிகிச்சை பெற்று செல்வதற்கு அனுமதி வழங்கி வரும் நிலையில், இங்குள்ள ஆறரை கோடி தமிழர்களை நம்பி சிகிச்சை பெற வந்த பார்வதி அம்மையாரை திருப்பி அனுப்பியதை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, சென்னையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ள பார்வதி அம்மையார், மீண்டும் சென்னைக்கு வந்து தேவையான மருத்துவச் சிகிச்சை பெற மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் அவருக்கு இந்த அனுமதியை வழங்கும்படி மத்திய அரசுக்கு, தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (2-6)

# 'கார்டோசாட் –2பி' செயற்கைக் கோள்

அதிநவீன தொலையுணர்வு செயற் கைக் கோளான'' கார்டோசாட் -2பி'' செயற்கைக் கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் (இஸ்ரோ) விண்ணில் செலுத்தவுள் ளது. இந்த செயற்கைக்கோள் அடுத்தமாதம் 9ஆம் திகதி விண்ணில் செலு த்தப்படுகிறது. இந்த தகவலை இஸ்ரோ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். கிரையோ ஜெனிக் சோதனை தோல்வி அடைந்தாலும், இந்த செயற்கைக் கோளை செலுத்தும் திகதியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட் டார். (2-6)

# “தமிழன் என்று பதிவு செய்!”

# தமிழகத்தில் சுவரொட்டி

தமிழகத்தில் மக்கள் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. நமது இனத்தை அழிக்க நம் நாடே இராணுவத்தை அனுப்பியதை மறக்க முடியுமா? அப்படியிருக்க நாம் ஏன் இந்தியன் என்று குறிப்பிட வேண்டும்? தமிழன் என்றே பதிவு செய்யுங்கள். இப்படியொரு சுவரொட்டியை தமிழகமெங்கும் ஒட்டி சலசலப்பை கிளப்பியிருக்கிறார்கள் தமிழ் சமூகங்களின் கூட்டமைப்பினர்.

இந்தியம் நம்மைக் கொல்ல இராணுவத்தைக் கூட்டிக்கொடுத்தது... திராவிடம் நம்மைக் கொல்ல நாடகம் ஆடிக் காட்டிக்கொடுத்தது... எனவே, இனச் சொந்தங்களே! மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மறந்தும் இந்தியன் என்றோ, திராவிடன் என்றோ பதிவுசெய்யாதீர்கள். தமிழன் என்றே பதிவு செய்யுங்கள் போன்ற வாசகங்கள் அதில் அடங்கியுள்ளன.

இதுதொடர்பாக சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் பேசுகையில், ஆரம்பத்தில் இருந்தே இந்திய அரசாங்கம் தமிழர்களை புறக்கணித்து வருகிறது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் பயன்பாட்டு வார்த்தையாக வந்த இந்தியா என்ற பெயர் பின்னர் அப்படியே நிலைபெற்றது.

மொழி அடிப்படையில்தான் இந்த கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ள வேண்டும். ஆனால் இந்தியாவில் பொதுவாக எந்த மொழியையும் கணக்கெடுப்பில் பின்பற்றுவதில்லை. நமது இனத்தை அழிக்க நம் நாடே இராணுவத்தை அனுப்பியதை மறக்க முடியுமா? அப்படியிருக்க நாம் ஏன் இந்தியன் என்று குறிப்பிட வேண்டும்? திராவிடக் கட்சிகள் எனக் கூறுபவர்கள் இதுவரை தமிழர்களுக்காக என்ன செய்துள்ளனர்?

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகத்தில் உள்ள அனைத்து திராவிடக் கட்சிகளும் இன்னும் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றன. அதனால் தான் மறந்தும் கூட கணக்கெடுப்பில் இந்தியன் என்றோ, திராவிடன் என்றோ குறிப்பிட வேண்டாம் என மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இந்த நிலை தொடராமல் தடுப்பதற்காகவும் அரசியல் மாற்றத்தை கொண்டு வரும் முயற்சியாகவே தமிழகம் முழுவதும் எங்கள் அமைப்பினர் இந்தவிழிப்புணர்வு சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர் என்றார்.

தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் அமைப்பாளர் உ. தனியரசு இதுபற்றி நம்மிடம் தெரிவிக்கையில், தமிழர்களை இந்தியர்களாக இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடு தான் தற்போதைய எதிர்ப்புக்குக் காரணம் .

நாங்கள் இந்தியாவை எதிர்க்கிறோம் என்ற எண்ணத்துடன் இதைப் பார்க்கக் கூடாது . தமிழர்களின் எண்ணிக்கையை வெளி உலகிற்கு அதிகரித்து காட்டும் முயற்சி தான் இது.

தமிழ் ஆர்வம் கொண்ட எந்த அமைப்பினர் வேண்டுமானாலும் எங்களோடு கைகோர்த்து செயல்படலாம் என்றார். (2-6)

# அமெரிக்கா ஓர் அணு ஆயுதகுற்றவாளி;

# ஈரானிய ஆன்மீகத் தலைவர் குற்றச்சாட்டு

அமெரிக்கா ஓர் அணுவாயுத குற்றவாளி என ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி கஹமென்னி அறிவித்துள்ளார். ஈரானிய தலைநகர் தெஹ்ரானில் அணுவாயுதகளைவு தொடர்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது இஸ்லாமிய மத நம்பிக்கைகளின் அடிப்படையில் அணுவாயுத பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அமெரிக்க அரசாங்கமே அணுவாயுத குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.


உலகின் ஒரேயொரு அணுவாயுத குற்றவாளியான அமெரிக்கா தனது பிழைகளை மறைத்துக் கொள்ள ஏனைய நாடுகளின் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குகின்றது.

அணுவாயுத களைவு தொடர்பில் கண்காணிப்பதற்கு சுயாதீன கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென ஈரானிய ஜனாதிபதி முஹமட் அஹமட்நிஜாட் தெரிவித்துள்ளார்.

அணுவாயுதகளைவு தொடர்பிலான அமெரிக்காவின் நிலைப்பாடு பெரும் அதிருப்தி அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற அணுவாயுதம் குறித்த மாநாட்டிற்கு ஈரான் அழைக்கப்படவில்லை.

ஈரான் அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதாக அமெரிக்கா குற்றம் சுமத்திவரும் அதேவேளை சக்தி வள தேவைகளுக்காக தாம் அணுஆலைகளைப் பயன்படுத்தி வருவதாக ஈரான் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)



ஐரோப்பிய நாடான ஐஸ்லாந்தில் உள்ள எரிமலை ஒன்று கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு வெடித்து சிதறியது. அதிலிருந்து வெளியேறும் சாம்பல் புகையால் ஐரோப்பா முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து எரிமலையில் இருந்தும் வெளிவரும் புகை.

# பாக்.முகாம்களில் தற்கொலைத் தாக்குதல்கள்

# 63 பொது மக்கள் உடல் சிதறிப் பலியாகினர்

(பெஷாவர்)

பாகிஸ்தான் –ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு முகாமில் தீவிரவாத அமைப்புகளால் இரட்டை தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சம்பவ இடத்திலேயே 63 பேர் உடல் சிதறி பலியாகியுள்ளனர்.



பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள மலைப்பகுதிகளில் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா இராணுவ உதவியுடன் ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டு வீசப்படுகிறது. எனவே அங்கு குடியிருக்கும் பொதுமக்கள் முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர். அதற்கான பதிவு செய்யவும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்று கோகட் நகரம் அருகே கச்சாபுகா என்ற இடத்தில் அமைக்கப்பட்ட முகாம் அலுவலகத்தில் தங்கள் பெயரை பதிவுசெய்ய மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

அப்போது குண்டு வெடித்தது. இதில் 38 பேர் பலியானார்கள். 68 பேர் காயம் அடைந்தனர். இதைத் தொடர்ந்து 10 நிமிடம் கழித்து மற்றொரு குண்டுவெடித்தது. அதில் 25 பேர் உடல் சிதறி இறந்தனர். 30பேர் காயம் அடைந்தனர்.

பலியானார்கள் உடல்கள் அப்புறப்படுத்தப்பட்டன. காயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சை அளிக்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அப்போது பர்தா அணிந்த 2 தீவிரவாதிகளின் உடல்கள் மீட்கப்பட்டன. இவர்கள் தற்கொலை தாக்குதல் நடத்தியிருப்பது தெரிய வந்துள்ளது. அவர்கள் பர்தா அணிந்த படி மக்கள் கூட்டத்தில் புகுந்து குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர்.

தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருவதால் பழிக்குப் பழி வாங்க இந்த தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கு லஸ்கர் – இ– ஜாங்வி அல் – அலாமி என்ற தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. (2-6)

# தோனி, பத்திரி, ரெய்னா அர்ப்பணிப்பு சென்னை அரையிறுதிக்கு நுழைவு



(தர்மசாலா)

தோனி, பத்திரிநாத், ரெய்னாவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வெற்றி கொண்டு அரையிறுதிக்குள் நுழைந்தது.

இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று தர்மசாலவில் நடைபெற்ற லீக் சுற்றின் 54ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர்கிங்ஸ் அணித் தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி ஷோன் மார்ஷ், இர்பான் பதான் அதிரடியில் 20 ஓவர்களில் நிறைவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 192 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷேன் மார்ஷ் 57 பந்துகளில் (8 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 88 ஓட்டங்களையும் இர்பான் பதான் 27 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 44 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அல்பி மோர்கல், அஸ்வின், ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 193 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஆரம்பத்தில் ஹைடன் (05), விஜய் (13) ஆட்டமிழந்து ஏமாற்ற 4 ஓவர்களில் 27 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

எனினும் அடுத்து வந்த ரெய்னா, பத்திரிநாத், தோனியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 19.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 195 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் மஹேந்திரசிங் தோனி ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 54 ஓட்டங்களையும் சுப்பிரமணியம் பத்ரிநாத் 36 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 53 ஓட்டங்களையும் சுரேஸ் ரெய்னா 27 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 46 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் ஆட்டமிழக்காமல் 8 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 14 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் ரமேஷ் பவார் 2 விக்கெட்டுக்களையும் பியூஸ் சாவ்லா, திரோன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் அதிரடி அரைச்சதம் கடந்து சென்னை அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த அணித்தலைவர் தோனி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 14 ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் 7ஆவது வெற்றியைப் பெற்று 14 புள்ளிகளுடன் ஓட்டவிகித சராசரியின் சாதகமான அதிகரிப்பினால் அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 22ஆம் திகதி நடைபெறும் இரண்டா



வது அரையிறுதிப் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியைச் சந்திக்கிறது.

இதேவேளை கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 14ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் 10ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# டில்லி டேர்டேவில்ஸ் அணியை வீழ்த்தி நடப்பு சம்பியன் டெக்கான் அரையிறுதியில்

(டில்லி)

தீர்க்கமான போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தி அரை யிறுதிக்கு முன்னேறியது.

கொலிங்வூட் இறுதி வரை போராடியும் டில்லி டேர்டேவில்ஸ் அணி அதிர்ச்சித் தோல்வி அடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 55 ஆவது போட்டியில் காம்பீர் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற நிலையில் இரு அணிகளும் களம் இறங்கின இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி சைமண்ட்ஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர் கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 145 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 54 ஓட்டங்களையும் மனீஸ் மிஷ்ரா 19 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 25 ஓட்டங்களையும் சமிந்த வாஸ் 8 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆசிஸ் நெகரா, யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அமித் மிஷ்ரா, கொலிங்வூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் போல் கொலிங்வூட் 42 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 51 ஓட்டங்களையும் ஆசிஸ் நெகரா 16 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 22 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹார்மிற் சிங், பிரக்ஜன் ஓஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ், மார்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 14ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் 8ஆவது வெற்றியைப்பெற்று 16 புள்ளிகளுடன் இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன் மூலம் கடந்த முறை சம்பியனான டெக்கான் சார்ஜர்ஸ் அணி இம்முறை அரையிறுதியில் மூன்றாம் இடத்திலுள்ள சென்னை அணியுடன் மோதுகின்றது.

இதேவேளை டில்லி டேர்டேவில்ஸ் அணி தான் விளையாடிய 14ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் 7ஆவது தோல்வியைச் சந்தித்தது.

## பொன்சேகா நாடாளுமன்...

உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்திற்குச் சமுகமளிப்பதற்கு எந்தவொரு அமைச்சினதும் அனுமதி அவசியம் அற்றது எனச் சுட்டிக்காட்டிய அனுரகுமார திஸநாயக்க, ஜெனரல் சரத் பொன்சேகா 22 ஆம் திகதி காலை அங்கு செல்லத் தயாராகி, தான் அங்கு செல்ல வேண்டும் எனக் கூறினால் அவரை நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியது அரசின் கடமைஎனவும் அதுதான்நீதியெனவும்கூறினார்.

ஜெனரல் சரத் பொன்சேகா மக்களின் வாக்குகளால் மக்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து சிறப்புரிமைகளுக்கும் ஜெனரல் சரத் பொன்சேகா உரித்தானவர் எனவும் கூறினார்.

எனினும் இந்த அரசாங்கம் ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்திற்குச் செல்வதைத் தடுக்க முற்படுகின்றது. இப்படியான ஒரு காட்டுத்தனமான அரசாங்கத்தைத் தாம் நடத்த விடமாட்டோம் எனவும் அவர் சூளுரைத்தார்.

அரசியல் அமைப்பு மற்றும் நாடாளுமன்ற சட்ட மூலத்திற்கு அமைய சட்டரீதியாகவோ அல்லது ஒழுக்க ரீதியாகவோ ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றம் செல்வதை இந்த அரசாங்கத்தினால் தடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-5)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு...

நாடாளுமன்றத்தில் குறைந்த பட்சம் 27 ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க் கட்சியின் பக்கம் அமர நேரிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆளும் எதிர்க்கட்சிகளுக்காக நாடாளுமன்றத்தில் தலா 116 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 143 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை சரத் பொன்சேகாவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள முடியாத வகையில் அரசாங்கம் தடைகளை ஏற்படுத்தி வருவதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சுமத்தியுள்ளது.

பொன்சேகா நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக அனுமதி கோரவில்லை என நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் நாயக அலுவலகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியன குறிப்பிட்டுள்ளன. (ச-5)

## ஜெனரல் பொன்...

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கப்படக்கூடிய சாத்தியங்களை மறுப்பதற்கில்லை என்பதுடன் தண்டனை வழங்குவது குறித்த தீர்மானங்களை நீதிவான்களே எடுக்க வேண்டும் எனவும் டெய்லி மிரர் இணையத்தளத்திற்கு அவர் கூறினார்.

ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்திற்குச் செல்வதைத் தடுக்கும் முகமாக அரசாங்கம் விரைவில் இராணுவ நீதிமன்ற விசாரணையை நடத்தவிருப்பதாக ஜனநாயக தேசிய முன்னணி குற்றஞ்சாட்டியிருந்தது.

அரசியல் ரீதியில் தோல்வியடைந்த கட்சி இவ்வாறான விமர்சனங்களை வெளியிடுவதில் ஆச்சரியமில்லை எனவும் லக்ஷ்மன் ஹுலுகல்ல குறிப்பிட்டார். (ச-5)

## பிரபாவின்...

கிழமை இரவு விமானம் மூலம் அவர் சென்னைக்குச் சென்றார்.

இந்திய அரசு ஆறு மாத காலத்திற்கு விசா வழங்கியதன் அடிப்படையில் அவர் சென்னைக்குச் சென்றார். ஆனால் சென்னை விமான நிலையத்திலிருந்து அவரை வெளியே அழைத்துச் செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

பார்வதியம்மாளையும் அவருக்குத் துணையாகச் சென்ற பெண்ணையும் நள்ளிரவில் மலேசியாவுக்கு அதிகாரிகள் திருப்ப அனுப்பிவைத்தனர். இந் நிலையில் மலேசியாவுக்குச் சென்ற பார்வதிக்கு அந்நாட்டு அரசு புகலிடம் வழங்கியுள்ளது. (ச-5)

## ஜனாதிபதியின் புதல்வர்...

தொண்டர்கள் சிலர் சென்னை விமான நிலையத்தை முற்றுகையிட்டனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் சென்னைக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் ஆத்திரமுற்றுள்ள தமிழக கட்சிகள் சில ஜனாதிபதியின் புதல்வர்களின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சென்னை விமான நிலையத்தை முற்றுகையிட்டதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இத் தகவலை முற்கூட்டியே அறிந்து கொண்ட தமிழக அரசு ஜனாதிபதியின் புதல்வர்களைச் சென்னையிலிருந்து புதுடில்லிக்கு அனுப்பி வைத்தது. மீண்டும் அவர்கள் இரவு 8 மணிக்கு சென்னைக்கு வருவார்கள் என எதிர்பார்த்திருந்த போதிலும் அவர்கள் வரவில்லை எனக் கூறப்பட்டது.

நாம் தமிழர்கள் அமைப்பு, பெரியார் திராவிடக் கழகம் ஆகியனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பராக்கிர...

திரத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது பிரஸ்தாப மாணவன் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். மரண விசாரணைகளின் பின்னர் இம் மாணவனின் சடலம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளது. (ச-5)

## எதிர்க்...

படுவார். இதற்குக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் உறுதியான தீர்மானம் ஒன்றுக்கு வர வேண்டும் என்றும் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். (ச-9)

## யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக...

கண்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்த் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு இந்தியா பங்காளராக இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இதற்கு மேலாக யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் மீள் குடியேற்றம், மீள் கட்டுமானப் பணிகளுக்கு இந்தியா பாரிய நிதியுதவியை வழங்குகின்றது.

குறிப்பாக மன் மோகன் சிங் தலைமையி லான அரசு 12.5 பில்லியன்ரூபாய்நிதியை வட மாகாணத்தின் மீள்குடியேற்ற, மீள்கட்டுமானப் பணிகளுக்கு வழங்கியுள்ளது.

இதன்படி மதவாச்சி-தலைமன்னார் மற்றும் ஓமந்தை-பளை-காங்கேசன்துறை வரையான புகையிரதப் பாதைகள் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகியவற்றின் புனரமைப்புக்கும் இந்திய அரசு உதவி வழங்குகின்றது. மற்றும் யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் அமைத்தல், துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்பு, வன்னியில் கல்வி, சுகாதார மேம்பாட்டுப் பணிகளுக்கு இந்திய அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீள்குடியேறிய மக்களுக்கென 2 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கான வீட்டுப் பாவனைப் பொருள்களின் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

50 ஆயிரம் குடும்பங்களுக்கு சீமெந்து பைக்கெற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் துறையில் வளர்ச்சியுள்ள யாழ்ப்பாணம் பொருளாதார வளம் மிக்க இடம்.

வடக்கு மாகாணத்தில் புகையிரத சேவையை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு மேலாக தலைமன்னாரிலிருந்தும் காங்கேசன்துறையிலிருந்து இராமேஸ்வரத்திற்குக் கப்பல் சேவையும் பலாலி விமான நிலையத்திலிருந்து தூத்துக்குடிக்கு விமான சேவையும் இடம்பெறவுள்ளது என்றார். (ச-5)




**siat**
ACADEMY
Lead, Create, Animate
A unit of SIAT GROUP
BANGALORE - INDIA

Animation துறையில் ஓர் உதயம். கருத்தரங்கும், பயிற்சிப் பட்டறையும்
இடம்: வீரசிங்கம் மண்டபம் காலம்: 24.04.2010, 25.04.2010
நேரம்: 9.00 AM-5.00 PM

அனுமதி சீட்டு ரூபா 500/- இரு தினங்களுக்கும். பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.
அனுமதி சீட்டுகள் கிடைக்கும் இடங்கள்:-

| | |
|---|---|
| IIS கணனி நிறுவனம் (நெல்லியடி) கொடிகாமம் றோட், நெல்லியடி Ph 021 2263335 | JAFFNA ELECTRICALS No.4, நியூ மார்க்கெட் சாவகச்சேரி |
| சிற்றி மெடிக்கல்ஸ் (யாழ்ப்பாணம்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | ANDRA DIGITAL IMAGE 6D, உப்புமடம் சந்தி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் |

மற்றும் 24ஆம் திகதி (மட்டுப்படுத்தபட்ட அளவில் அனுமதி சீட்டுகள் நுழைவாயிலில் கிடைக்கும்)
Contact No:0777497186. 021 3214756
(சி-122)



**ஐடியல் அக்கடமி**

| | | |
|---|---|---|
| சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய். |

**O/L Day Class**
மூன்று இடங்களிலும் இன்று குதூகல ஆரம்பம்
★ நாம் ஒன்றும் கவர்ச்சிக்காகவும், புகழ்ச்சிக்காகவும், விளம்பரம் செய்யவில்லை எமது ஆசிரியர் குழுவின் தீவிர முயற்சியால் மாணவச் செல்வங்கள் பெற்ற உயர்ச்சியைத் தான் சொல்கிறோம் - செய்கிறோம்.
-நிர்வாகி.
(1209)


## அரசியல் தீர்வைப் பெறுவதற்கு...

திருகோணமலையில் கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றுகூடல் நேற்று நடைபெற்றது. இவ் ஒன்றுகூடலின் பின்னர் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்பை அரசாங்கம் அங்கீகரிப்பதுடன் அதனை மதித்து அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற முறையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணவும் வடக்குக் கிழக்கில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் எம்மை ஈடுபடுத்தல் வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நாடாளுமன்றக் குழுவின் முதலாவது கூட்டத்தை ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடத்தியது.

காலையில் சமுகமளிக்காத யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா பிற்பகல் திருகோணமலை வந்து கூட்டத்தில் கலந்து கொண்டார்.

14 நாடாளுமன்ற உறுப்பினரும் பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றினர். பத்திரிகையாளர் மாநாட்டில் இரா.சம்பந்தன் மேலும் கூறியதாவது,

நாம் இலங்கை நாட்டுக்குள் பிரிவினையைக் கோரவில்லை. அதனை ஆதரிக்கவுமில்லை. வன்முறையை அதிகரிக்கவும் இல்லை. அதாவது ஆக்கபூர்வமான பேச்சின் மூலமாக நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வு ஒன்றினை எதிர்பார்க்கின்றோம். அதனையே நாம் விரும்புகின்றோம்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்துக் கடந்த பல தசாப்தமாக பல அரசியல் கட்சிகள் முரண்பட்டுள்ளன.

இந்த வகையில் உலகில் பல்வேறுபட்ட இனங்கள் வாழ்கின்ற நாடுகளில் நடைமுறையில் உள்ள அரசியல் முறைமைகள் இந்த நாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

அதனை ஆராய்ந்து பார்க்கலாம். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சிக் குழு மூலம் பல்வேறு நாடுகளில் உள்ள அரசியல் முறைமையைப் படித்து ஏற்புடைய தீர்வினை முன்வைக்கலாம்.

உதாரணமாக எமது அண்டை நாடான இந்தியாவிலுள்ள அரசியல் முறைமையைப் பின்பற்றிப் பார்க்கலாம்.

இவ்வாறு ஒரு முன் முயற்சிக்கு நாம் எமது பரிபூரணமான ஆதரவினை வழங்குவதற்குத் தயாராகவுள்ளோம் என்றார்.

தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் நீங்கள் எவ்வாறு நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்று சம்பந்தனிடம் கேட்கப்பட்ட போது, அது பற்றிப் பின்னர் முயற்சி எடுப்போம். தற்போது அது குறித்துப் பேச அவசியமில்லை என்று கூறினார்.

இதேவேளை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் நாடாளுமன்றத்தில் சேர்ந்து செயற்படுவது குறித்து சம்பந்தன் எதனையும் குறிப்பிடவில்லை. (ச-3,5,9)


அனைவரையும் அழைக்கிறோம்

JAFFNA International TRADE FAIR 2010
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை



சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி
நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்
முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY:
LECS
LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
A member of SAES SOUTH ASIA EXHIBITION SERVICES Network

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563 E-mail: rizwan@saexhibitions.com
www.saexhibitions.com/jitf

IN ASSOCIATION WITH
CCIY
JOINTLY ORGANISED BY
FCCISL
SUPPORTED BY
SRI LANKA CONVENTION BUREAU
SPONSOR
Sri Lanka Telecom Mobitel We Care. Always.
PARTNER COUNTRY
INDIA
OFFICIAL PRINT MEDIA
OFFICIAL RADIO
வெற்றி FM
(சி-107)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.